குறள்நெறி

கட்சிச்சார்பற்ற அரசியல் இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் இயக்க வெளியீடு

புரட்சிக் கவிஞர் நினைவு ★ மலர் ★

ஆசிரியர் : பேராசிரியர் சி. இலக்குவனார் எம்.ஏ. எம்.ஓ.எல்.

ஆண்டுக் கட்டணம் ரூ. 5. திங்களிருமுறை வெளிவருவது தனி இதழ் 25 காசு

மலர் : 1 | திருவள்ளுவராண்டு 1995 சித்திரைத்திங்கள் 19ஆம் நாள் (1-5-1964) | இதழ் : 8

பைந்தமிழ் போற்றிய பாவேந்தர்

பெயர்–ஊர்–பெற்றோர் :

பாவேந்தர் பாரதிதாசனின் இயற்பெயர் கனக சுப்புரத்தினம். புதுவை (புதுச்சேரி) யில் பெருவாணிகரான கனகசபை முதலியாரும் இலக்குமி அம்மையாரும் இவரின் பெற்றோர்கள்.

புனைபெயரும் காரணமும் :

இவர் புனைபெயர் 'பாரதிதாசன்' என்பது. மதுரையில் 'தேசோபகாரி' என்ற நாளேட்டில் முற்போக்குக் கொள்கை பற்றிப் பாட்டு எழுதி வந்ததைப் புதுவை அரசு எதிர்த்தது. இவர் அரசினர் ஆசிரியர் ஆதலால்!

இவர் தம் கொள்கையை மறைத்துக்கொள்ள விரும்பவில்லை; தம் இயற்பெயரைப் புனைபெயரில் மறைத்துக் கொள்ள எண்ணினார். இவர் தமக்கொரு புனைபெயர் தேடும்போது, தம் நினைவின் முன்னிருந்த பாரதியை வைத்துத் தாசன் என்பதை அதனோடு சேர்த்துக் கொண்டார். எனவே, 'பாரதிதாசன்' ஆனார்.

மனங்கவர்ந்த மனிதர் :

இவரது மனங் கவர்ந்த மனிதர் அப்போது பாரதியார் ஒருவரே! அதற்குக் காரணம் இரண்டு. ஒன்று: பாரதியார் பார்ப்பனர்; அவரால் எதிர்க்கப் படுபவர்கள் பார்ப்பனர்கள். 'சாதி என்பது ஒழிந்தால்தான் நாடு உருப்படும்' என்பது பாரதியாரின் ஆழ்ந்த எண்ணம். அவர் வெளிப்படையாகவே சாதிக் கோட்பாட்டை ஒழிக்கப் பாடினார். இரண்டாவது காரணம்: எளிய நடையை இலக்கணப் பிழை இல்லாமல் கவிதைச் சுவை சொட்டச்சொட்ட மக்களுக்கு அன்றைக்கு ஆக வேண்டிய கருத்தை வைத்துப் பாட்டெழுதி நாட்டைக் கவர்ந்தவர்.

கனக சுப்புரத்தினம் வழி மாற்றம் :

கனக சுப்புரத்தினம் அவர்களைப்

பாட்டெழுதிச் செல்லும் வழியினின்று மடக்கித் திருப்பியவர் பாரதியார் என்றே சொல்லவேண்டும். பழங்கருத்து பழ நடை வைத்துப் பாடல்கள் எழுதிக் குவித்து, அந்த வகையில் புகழும் பெற்று வந்த இவர், பாரதியின் கவிதை நடை கண்டு இதையே பின்பற்றலானார்.

பாரதியார் இருக்கும் போதே இவர் பாரதியாராலும், நாட்டு மக்களாலும் 'கவிஞர்' என்று போற்றப் பெற்றவர்.

பன்மொழிப் புலவர் அல்லர் !

பாரதிதாசன் பன்மொழிப் புலவர் அல்லர். தமிழ் ஒன்றுதான் தெரியும். தமிழில் பெரும்புலவர்; இலக்கண வல்லுநர். தமக்குத் தமிழ் மட்டும் தெரிந்திருப்பதை அவர் வெறுக்கவில்லை. பிறமொழிப் பயிற்சி இல்லாமையை அவர் எண்ணுந்தோறும் மகிழ்ச்சியடைவதுண்டு. நாளேடு எழுதுவோரும், கிழமை ஏடு எழுதுவோரும் இவருக்கு நண்பர்கள். அவர்கள் எழுதுவன அனைத்தும் ஆங்கில ஏடுகளிலிருந்தும், ஆங்கில நூலகளிலிருந்தும் அப்படியே மொழிபெயர்க்கப்பட்டவை யாகவே இருந்தன. சொந்தக் கற்பனைக்கு வழியே இல்லை! 'நான் அயல்மொழி பயிலாதது நல்லதாயிற்று' என்று கனக சுப்புரத்தினம் அவர்கள் மகிழ்ந்து உரைத்தது உண்டு!

குறிப்பிடத் தக்க கொள்கை :

இவரது குறிப்பிடத்தக்க கொள்கை ஒன்று: அயல்மொழி நூற்களைத் தமிழில் கொணர்வதை இவர் எதிர்க்கவில்லை. தமிழர் கலை, தமிழர் நாகரிகம், தமிழர் ஒழுக்கம் ஆகியவற்றை எதிர்ப்பன எவையோ, அவைகளைத் தமிழிற் கொணர்தலை அடியோடு எதிர்க்கின்றார் கனக சுப்புரத்தினம்.

தமிழில் அமைந்த நூற்கள் அனைத்தும் தமிழ் நூற்கள் என்பதை அவர் ஒப்புவதில்லை. தமிழர் கலை, தமிழர் நாகரிகம், தமிழர் ஒழுக்கம் என்பவை தனி. அவைகள் தமிழில் அமைந்த நூற்கள் தாம் தமிழ் நூற்கள் என்பது அவர் நிலையான கருத்து.

(2ஆம் பக்கம்)

பாவேந்தர் புகழ்பாடிப் பைந்தமிழ் வளர்ப்போம்.

இரங்கல் உரைகள்.

"சமுதாயத்தில் புரட்சிக்கருத்துக்களைப் பரப்பிய கவிஞர் பாரதிதாசனின் மறைவு தமிழகத்திற்கு மட்டும் நட்டமல்ல. சீர்திருத்தக் கருத்துக்களைக் கொண்டுள்ள சுயமரியாதை இயக்கத்திற்கே பேரிழப்பாகும்"

பெரியார் ஈ. வே. இராமசாமி

—

"இந்த நூற்றாண்டின் தலைசிறந்த கவிஞர் பாரதிதாசன் ஆவார். அவர் இரும்பு நெஞ்சம் கொண்டவர். இன்று சாய்ந்துவிட்டார். இந்த இழப்பு தமிழகத்துக்கு ஈடு செய்யமுடியாதது ஆகும்".

பேராசிரியர் டாக்டர் மு. வரதராசனர்

—

நாம்-தமிழர் கட்சித்தலைவர் ஆதித்தனரும் பாரதிதாசன் மரணம் குறித்து வருந்தி இரங்கற்செய்தி ஒன்று விடுத்துள்ளார். அதில் அவர் கூறியிருப்பதாவது:

பாரதிதாசன் மறைந்தாலும் அவர் எழுதிய கவிதைகள் என்றும் நிலைத்து நிற்கக்கூடியவை. தூய தமிழ் வளரவேண்டும் என்பதற்காகப் பாரதிதாசன் பாடுபட்டார். வடமொழி என்று கூறப்பட்ட சொற்கள் எல்லாம், தமிழ்ச்சொற்கள் என்று அவர் கூறிவந்தார்.

சான்ருக வடமொழிச் சொல்என்று கருதப்பட்ட "வேஷ்டி" எனும் சொல் வேட்டி என்ற தமிழ்ச் சொல்லிலிருந்துவந்தது என்று சுட்டிக் காட்டினர்.

தமிழ்மொழி, தமிழ்நாடு, தமிழ் இனம் என்ற தணியாத பற்றுக்கொண்டவர்.

சி. பா. ஆதித்தனர்.

—

பாரதிக்குப்பின் தலைசிறந்த கவிஞர் பாரதிதாசன், அவரது இழப்பு ஈடுசெய்ய முடியாததாகும்.

டி. கே. சண்முகம்

'குயில்' பறந்துவிட்டதே!

புரட்சிக்கவிஞர் மறைந்துவிட்டார்; புதுவைக் குயில் பறந்துவிட்டது; தமிழகத்தில் 'குடும்ப விளக்கை' ஏற்றிவைத்தார்: 'பாண்டியன் பரிசை' வழங்கினர்; 'அழகின் சிரிப்பை' அள்ளிக்கொட்டினர்; அவரது 'எதிர்பாராத முத்தம்' பெற்ற கலை அழகி அன்றலர்ந்த தாமரைபோல் ஆனுள்.

கடவுள் பெயரால், மதத்தின் பெயரால் இழைக்கப்படும் கொடுமைகளைச் சாடினர். பகுத்தறிவுப் பண்ணையின் காவலர்களாக அவரது கவிதைகளை நிற்கவைத்துவிட்டார்.

பாரதிதாசன் என்பது இனி ஒரு தனி மனிதரின் பெயர் அல்ல, தமிழ் இன்பம் பொழிகின்ற கவிதைத்தொகுப்பின்பெயர். அந்த பாரதிதாசனைஎன்றென்றும் நம்மிடம் வைத்துப் போற்றிக்கொண்டே இருப்போம்.

மு. கருணாநிதி

—

"அஞ்சாநெஞ்சமும், அழகியகவிபுனையும் புலமையும் தமிழர் வாழ்வில் தனிநோக்கமும் உடைய தக்க கவிஞர் பாரதிதாசனரை தமிழகம் இழந்துவிட்டது. இது ஈடு காணமாட்டாத இழப்பாகும்"

தமிழ்ப்பேராசிரியர் ஔவை சு. துரைசாமிப்பிள்ளை

—

தமிழுக்கும், தமிழர் நல்வாழ்வுக்கும் மறுமலர்ச்சி ஏற்படுத்தப்போராடியவர். அவர் போரில் பின் வாங்காத வீரதளபதி; வெற்றிகளைக்கண்ட மாவீரர் அவர் இன்று மறைந்துவிட்டார்,

மகாகவி பாரதியார் மறைவுக்குப்பின்பு இதை அடுத்த நிகழ்ச்சியாகக் கருதுகிறேன்; பாரதியாரின் வழித்தோன்றலை வாரிசை இழந்துவிட்டோம்; அவருடைய மறைவு ஈடு செய்யமுடியாத இழப்பு ஆகும்.

ம. பொ. சிவஞானம்

1ஆம் பக்கத் தொடர்ச்சி ... ...

அன்றும் இன்றும் அப்படி :

இவர் இயற்றிய நூற்கள் ஏறத்தாழ ஐம்பது, கவிதையாகவும் உரைநடையாகவும் அமைந்துள்ளன. அந் நூற்கள் இயற்றப் பெற்ற காலத்தில் எவ்வாறு விறுவிறுப்போடு விற்பனை ஆயினவோ, அவை இன்றளவும் அப்படியே!

புகழ் :

இவர் தாம் கண்ட உண்மையை எப்போதும் எவ்விடத்தும் வற்புறுத்திப் பேசுபவர்: எழுதுபவர். அதனல், கட்சிக் காரர் மிகுதிப்பட்டிருக்கும் தமிழகத்தில் அவருக்கு எதிர்ப்பு அதிகம்! ஆனல், எதிர்ப்பவரும் எடுத்துக்காட்டும் கவிதைகள் கனக சுப்புரத்தினம் அவர்களின் படைப்பே ஆகும்! இந்த நிலை எதைக் காட்டுகிறது? இவர் புகழ் இணையற்றது என்பதைக் காட்டுகிறது!

அரை நூற்ருண்டுக்கும் மேற்பட்ட அரும்பணி :

நமது புரட்சிக் கவிஞருக்கு இந்த 29-4-1964 உடன் எழுபத்துநான்கு ஆண்டு முடிவடைகிறது பதினறு ஆண்டினின்றே இவர் பாட்டுக்கு நாட்டில் தேவை அதிகம். எனவே, அவர் ஐம்பத்தெட்டு ஆண்டுகளாகப் பாட்டு எழுதி வந்தவர். அவர் பாட்டுக்களால் நாட்டுக்குப் பயனுண்டு இன்றைய கவிஞர் உலகம். 'பாரதிதாசன் கவிதை மண்டலம் தான்' என்பதில் மிகையொன்றுமில்லை!

புதுக் கருத்துக்கு இலக்கியம் :

மலர்ந்து வரும் புதுக் கருத்துக்களுக்கு இலக்கியம் பாவேந்தர் படைப்பே! இன்றைக்கு ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னமேயே, 'சாதி இல்லை'. 'மதமான பேய் பிடியாது இருத்தல் வேண்டும்', 'கைம்பெண்களுக்கு மறுமணம் தேவை' முதலிய முற்போக்குக் கருத்துக்களை வைத்துப் பெருநூற்கள் செய்தவர் பாரதிதாசன் ஒருவரே!

கல்வியின்மையும் கவலையும்

'என் நூலை மக்கள் வாங்காவிட்டால் போகிறது!' என்று ஒருகாலத்தில் சொன்ன இவர், பின்னர் ஆசையோடு கேட்கும் பெருந் தொகையான மக்களுக்கு வேண்டிய அளவு அச்சடித்துத் தர இயலவில்லையே!' என்று வருந்தினர்.

நூற்கள் :

இவர் நூற்களில் பாரதிதாசன் கவிதைகள் மூன்று பகுதி, எதிர்பாரா முத்தம், அழகின் சிரிப்பு, இரணியன், சேர தாண்டவம், இசையமுது, காதலா? கடமையா?, குறிஞ்சித் திட்டு, தமிழியக்கம், அமைதி, நல்ல தீர்ப்பு, படித்த பெண்கள், குடும்ப விளக்கு ஐந்து பகுதி, பாண்டியன் பரிசு முதலியவை படித்து இன்புறத் தக்கவை.

ஏடுகள் :

'பாரதி கவிதா மண்டலம்' முதலிய ஏடுகளின் ஆசிரியராய் இருந்து திறம்பட நடத்திய இவர் 'குயில், என்ற கவிதை ஏட்டின் ஆசிரியராகவும் இலங்கினர்.

கவிஞர் பெருமன்றம் :

அண்மையில் பாரதிதாசன் அவர்களின்ஊக்கத்தைஎல்லாம் தமதாக்கிக் கொண்ட ஒன்று, 'அனைத்துலகத் தமிழ்க் கவிஞர் பெருமன்றம்' என்பது!

வாழ்க பாவேந்தர் புகழ்.

(தமிழகப்புலவர்குழுவின்சிறப்புமலர்)

கருத்து அரங்கம்

இந்தியால் தமிழுக்குக் கேடு...?

வினு 6: மொத்தத்தில் இந்தியால் நம் தமிழ் கிஞ்சித்தும் சிதைவுருது என்று பசுமரத் தாணிபோல் என் மனத்தில் பதிகிறது. இதில் உங்கள் மனச்சாட்சி என்ன?

விடைகள் :

நம்நாட்டிற்கு அண்டை நாடுகள் பண்டைக்காலம் தொட்டு வாணிபம் போக்குவரவு முதலியவை நீடிப்பினும், அந்நாட்டு மொழிகள் நட்பு மொழிகளானதால் மொழி வளர்ச்சியே யன்றிக் கேடில்லை. ஆட்சி மொழிகளாக வந்தவைதான் மொழியைச் சிதைத்தன வென்பது மேலே கூறினேம். இந்திஆட்சிமொழியாக வந்தும் வராததின் முன்பே பல தமிழ்ச் சொற்களழிந்ததையும் எடுத்துக்காட்டினேம். இந்தி ஆட்சி மொழியாக நீடிக்குமானுல் அரசியல் அலுவலகங்கள், பள்ளிகள், வழக்காறுகளிலுள்ள கொஞ்ச நஞ்சச் சொற்களுமழிந்து தமிழ் வீட்டுமொழியாக ஏட்டு மொழியாக உலவி வருமன்றி ஒரு மதிப்பான மொழியாக நாட்டிற் செல்வாக்குப் பெற்ற மொழியாக இருக்க முடியாது. ஆதலின், "தமிழ் கிஞ்சித்தும் சிதைவுருது" என்ற உறுதியை வினவிய நண்பர் அறவே மாற்றிக்கொள்ள வேண்டுமென்பதுதான் நமது மனச்சான்றின் முடிவு.

— மே. சி. சிதம்பரனுர்

இந்தி புகுத்தப்படுவதால் தமிழ்மொழியின் வளர்ச்சி மிகவும் தடைப்படும். இந்தி புகுத்தலால் தாய்மொழிப் பற்றும் குறையும். அரசின் பாராட்டுதலைப் பெறும் பொருட்டு தமிழ் இலக்கியங்களைப் புறக்கணித்து அம்மொழி இலக்கியங்களைப் பலரும் கற்க முன்வருவர் அதனுல் தமிழின் வளர்ச்சியும் அதற்கு அளிக்கப்படும் ஆதரவும் குறையும். ஆங்கிலஆட்சிக்காலத்தில் பலரும் தமிழைப் புறக்கணித்து ஆங்கில இலக்கியங்களைப் பயிலவில்லையா?

குறள்நெறி இந்தி-தமிழ் என்று பிரித்துப் பேசவில்லை. இந்தியின் புகுத்தலால் தமிழுக்கு நேர்ந்துள்ள நேரவிருக்கும் இழுக்குகளையே மக்களுக்கு அறிவுறுத்துகிறது. இச்செயல் எந்தக்கட்சிக்கும் வளர்ச்சியாய் அமையாது இந்திய நாட்டின் பற்றிலிருந்து ஒரு சிலரை வெளியேற்றுவது இந்திய மொழிகளில் ஒன்றுக்குத் தனிச்சிறப்பும் ஒதுக்கீடும் அரசினர் அளிக்கும் செயலேயன்றி, தாய்மொழிப் பற்றாட்டும் செயலன்று.

— மு. க. இராசமாணிக்கம்

இந்தியால் தமிழ் சிதைவுருது என்பது ஒப்புக்கொள்ள முடியாது, மொழியறிஞர்கள் எவருமே இக்கருத்தினை ஏற்கார். தாங்களும் தங்கள் மனச்சாட்சியை மாற்றிக்கொள்ள வேண்டுகிறேன். இன்று வழக்கிலுள்ள தமிழை உற்று நோக்கினுல் பிறமொழிகளால் தமிழின் சிதைவை உணரலாம். உறவுமொழியாக வந்த சமசுக்கிருதத்தாலும், ஆட்சிமொழியாக வந்த ஆங்கிலத்தாலும், தமிழ்மொழி எவ்வளவோ சிதைந்து அன்றைய சிறப்புகளை இழந்துள்ளது. நாமெல்லாம் எழுதும், பேசும் தமிழே இதனை முழுமையாக எடுத்துக் காட்டுகிறதே? தமிழ்ப்புலவர்கள் கூட வடமொழிச் சொற்களையும், ஆங்கிலச் சொற்களையும் தூயதமிழோடு கலக்க நேரிடுகிறது. புலவர்களே இவ்வாறெனில் புலமையில்லாதவர்களின் தமிழைப் பற்றி விளக்கத் தேவையில்லை இவ்வாறு, தமிழோடு சமசுக்கிருதமும் ஆங்கிலமும் பிரிக்க முடியாமல் கலந்திருப்பது, தமிழின் சிதைவைக் கூறவில்லையா? இந்தி ஆட்சி மொழியாக வந்து தமிழோடு பெரிதும் கலக்கும்; இந்தியால், தமிழ்மொழி மேன்மேலும் சிதைந்து தூய்மை குன்றும்.

— தமிழ்ப்பித்தன்

பசுமரத்தில் ஆணி எவ்வாறு எளிதாகப்பதிகின்றதோ அதேபோல வெகு எளிதாக எடுக்கவும்படலாம்! இந்தி ஆதரவாளர்களும், அதிகாரப் பிரியர்களும் அழகாக மேடைகளில் பேசுவர்; கேட்பவர் மனதில் பசுமரத்தாணிபோல் பதியத்தான் செய்யும். ஆனுல் சிந்திப்பவர்க்கு இது ஆணி அல்ல, புல்லுருவி என்பது புலப்படும்.

ஆனுல் வைரம் ஏறிய நெஞ்சினனுக்கு ஆபத்து இல்லை. எவனிடம் தமிழறிவும், தமிழ்ப்பற்றும் உளதோ அவனுக்கு அச்சம் இல்லை. தமிழர்கள் அனைவரும் உறுதியாக இருந்து, தமிழே எங்கள் உயிர் என இருந்து, தமிழை ஐயம் திரிபறக் கற்பார்களாயின், ஆயிரம் மொழிகள் ஆட்சி செலுத்தினும் அச்சமில்லை. அச்சமில்லை. முடியுமா? இந்தி படித்தவன் அதிகாரி ஆகிவிடுவான்! அடிமையாக இருக்க விரும்புவரா? அன்று. ஆயின் தமிழை விடுத்து இந்தி படிக்க முனைவர். போட்டி போட்டுப்படிப்பர். தமிழின் கதி என்னை? சிந்தனை செய்மின்.

— வித்துவான் சேகராசன் பி.ஏ.

இந்தியால் தமிழ் கிஞ்சித்தும் அழியாது என்று இந்தி வெறியர்கள் தான் சொல்வர். தமிழர்களாகிய நாம் கூறுவது அறிவு நிறைந்த கூற்ருகாது. ஒருவன் பாலுக்குக் காவலாகவும் பூனைக்குத் தோழனுகவும் எப்படி இருக்க முடியும்? அதுபோல் தான் இந்தியும் வேண்டும், தமிழும் வேண்டும் என்று கூறுவது அமைந்துள்ளது.

— ப முத்துச்சாமி

இந்தியால் நந்தமிழ் கிஞ்சித்தும் சிதைவுருது என்று கூறுதல் மனச்சான்றுக்கு மாருகக் கூறும் கூற்று என என் மனத்தில் பசுமரத்தாணி போல் நிலைபெற்றிருக்கும் தன்மையாகும். மாணவரிடையே மும்மொழித்திட்டம் மூளையைக் குழப்பிக் கொண்டிருப்பதையும், அரசு அலுவலர் பலர் தாய்மொழி தவிர பிறமொழி தெரியாக் காரணத்தால் குறிப்பாக இந்தி தெரியாதிருப்பதால் தமக்குப் பதவி உயர்வு பாதிக்குமே என்ற மன வேதனையுடன் தாய்மொழியைப்பற்றிய தம் கவனத்தை மாற்றியதாலும் தமிழ் சிதைவுபெற்று வருகின்றது. இது தவிர, இந்தியைக் கற்ருல் தனி உரிமைகளும் கிடைக்கின்றன என்ற ஆசை வலையை வீசித் தமிழ் மாணவர்களின் மனத்தின் எழுச்சியை அடக்குவதன் காரணத்தாலும் தமிழ் சிதைவுற்று வருதல் வெள்ளிடைமலை.

— மு. நடராசு

பிறமொழி புகுவதால், புகுந்த மொழி உயர்ந்த இடத்தில் அமர, இருந்த மொழி தாழ்ந்த இடத்தில் வைக்கப்படுகிறது ஆட்சியில் இருக்கும் மொழிக்கு எப்பொழுதும் வளர்ச்சியும் சிறப்பும் வந்து சேரும். ஆட்சியில் இருக்கின்ற மொழி குறவர் மொழியாக இருந்தாலும், குறத்தி மொழியாக இருந்தாலும் அதுமட்டும் தனிச் சிறப்புப் பெற்று ஓங்கிநிற்கும். அதன்கீழ் இருக்கும் மொழி சிதைவுறும். காலப் போக்கில் அழியும். இங்கிலாந்து வரலாற்றில் ஆங்கிலத்திற்கு முன்னிருந்த மொழி அழிந்ததும், இடைக்காலத்தில் தமிழுக்கு வீழ்ச்சி ஏற்பட்டு வடமொழி ஏற்றம் பெற்றதும் சிறந்த சான்றுகள்.

'இந்தி படித்தால்தான் வேலை: இந்தி படித்தால்தான் வாழ்வு; இந்தி படித்தால்தான் உயிர்' என்றநிலை உருவாகிவிட்டது. மொழியைவிட வயிறும் வாழ்வும் பெரிது என்று எண்ணும் நிலை வறுமை மிகுந்த நாட்டில் நடைமுறையில் காணும் காட்சி! வேலையில்லாத்திண்டாட்டம் பெருகியிருக்கும் இவ்வேளையில் இந்தி படித்தால் வேலை எளிதில் கிடைக்கும் என்ருல் இந்தியைப் படித்து வாழ்வை வளமாக்க எவரும் தயங்க

(தொடர்ச்சி அடுத்த பக்கம்)

இரங்கல் பாக்கள்

கண்ணீர்ப் பெருக்கினைக் காண்

— கவிஞர் முத்நன்

கத்து கடல்சூழ் புதுவைக் கருங்குயிலே!
புத்தமுதப் பாடற் பொழிவாய் நீ—இத்தரையில்
மெத்தபுகழ் ஒத்தவிசை எத்தனையோ அத்தனையும்
நத்திச் சுவைத்தாய் நன்று.

பாடும் இசைக்குயிலே, பாரதி தாசனே!
தேடு சுவைபடைத்த தேன்பொழிலே!-கூடு
துறந்து தமிழ்ச்சோலை சுற்றறுத் தேனோ
பறந்தாய் மறைந்தாய் பகர்!

கானக் குயிலே! கனித்தமிழின் இன்சுவையே
மோனப் பெருந்துயிலில் மூழ்கியதேன்? - ஞானத்
திருவிளக்கே பாவுலகில் தேடினும் உன்போல்
ஒருவிளக் குண்டோவுரை!

பாட்டுத் திறத்தாலே பைந்தமிழைக் காக்கும்-மாங்
காட்டுக் குயிலரசே! காதலினால் - நாட்டிலுறு
கேடுகளைப் போக்கக் கிளர்ந்தெழும் உன்குரலைக்
கூடுமோ கேட்கஇனிக் கூறு!

புரட்சிக் குயிலே! புவிமாந்தர் கொள்ளும்
மருட்சிதமைத் தீர்க்கும் மருந்தே-இருட்டிலா
விண்ணிற் பறந்ததனால் வெம்புமன மாந்தர் தம்
கண்ணீர்ப் பெருக்கினைக் காண்!

——

எவரிடம் காண்பது . . .

— கவிஞர் இளங்கம்பன்

அருந்தமிழ்த் தாயுவக்க
அளப்பரும் பணி பரிந்தோய்!
பெரும்பகை முகில் கிழித்து
பேரொளி தந்த வீர!
இருபதாம் நூற்றாண் டிற்கோர்
இணையிலாக் கவிஞரேறே!
அருவிபோல் எமக்(கு) இனித்த
அரசே நீ மறைந்தாயாமே!

குன்றுபோல் நிற்கு முன்றன்
கோலத்தை; மாற்றார் சூழ்ச்சி
ஒன்றுக்கும் ஆட்படாத
உறுதியை, புரட்சிப் போக்கை,
கன்றுக்குத் தாய்போல், கன்னிக்
கவிஞர்பால் குழையும் மாண்பை
என்றினிக் காண்பதையா!
எவரிடம் காண்பதையா?

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

கருத்து அரங்கம் ... ...

பாட்டார்கள். இங்குதான் தமிழுக்கு முதல் அரிவாள் வெட்டு விழுகிறது என்பதை மனதில் கொள்ள வேண்டும்.

கடந்த ஒரு ஆண்டில் மதுரையில் மட்டும் எட்டு 'இந்திப் பிரச்சார சபைகள்'' புதிதாகத் தோன்றியுள்ளன. இந்தியால் தமிழுக்குக் கேடு இல்லை யென்றால் இந்திப் பிரச்சார சபைகள் தோனறியிருக்கக் கூடாது. எட்டுத் தமிழ்ச்சங்கங்கள் (கல்லூரிகள்) அல்லவா தோன்றியிருக்க வேண்டும்!

— பா. வெற்றிச்சுடரோன்

குயில் பிரிந்த கூடு

— புலவர் இரா. இளங்குமரன்

1 குயில்பிரிந்து போய்விட்ட கூடே அம்மா!
குளிர்மதியம் மறைவுற்ற வானே அம்மா!
பயிர்கருகிப் பசையற்ற வயலே அம்மா!
பறையின்றி நடைபோடும் படையே அம்மா!
உயிரமுதாம் நரம்பறுந்த யாழே அம்மா!
ஓடியுண்டு போகப்பட்ட வாளே அம்மா!
பயிலுணர்வுப் பாவேந்தன் பிரிந்து போன
பைந்தமிழ்ப் பாவுலகம் ஐய ஐயோ!

2 நெஞ்சத்தில் பட்டவெலாம் கற்றின்றோர்கள்
நெஞ்சத்தில் படுமாறு நேர்மை யாகச்
செஞ்சொற்கள் கொண்டுரைக்க வல்லோன் யாவன்?
செழுந்தமிழே பேச்சாக மூச்சும் ஆகக்
கொஞ்சற்கும் கெஞ்சற்கும் வன்கண் மைக்கும்
குலையாமல் தளராமல் தமிழைக் காத்த
அஞ்சாத அடலேற்றைப் புலியின் போத்தை,
அருந்தமிழை, ஆரமிழ்தை இழந்தோம் அந்தோ!

3 தமிழ்ப்பகையைத் தம்பகையாய்க் கருதி நேரே
தமிழ்க்கொடியைத் தனிக்கையில் பிடிப்போன்
யாவன்?

தமிழ்த்தலைமைப் பேறெய்திப் பட்டம் எய்தித்
தமிழ்ச்சிறப்பும் தமிழ்வாழ்வும் பெற்றிருந்தும்
தமிழ்ப்பகையாய் இருப்பாரைத் தட்டிக் கேட்கத்
தயங்காத தனிவீரன் யாவன் தானோ?
தமிழிசைக்கும் தவக்குயிலே! தண்டேன் வண்டே!
தமிழ்ச்சேடு சூழ்நிலைமை மறந்தோ சென்றாய்?

4 பாரதியார் காலத்தின் பின்னர் இந்தப்
பழந்தமிழைப் பைந்தமிழாய் வளர்க்க வந்த
சீரமைந்த செழும்புலவ! செஞ்சொல் வேந்த!
சிறப்பமைந்த உயர்கவிஞ! தமிழியக்கம்
நேரமைபத் தெருத்தோறும் தமிழ்முழங்க
நிலைத்தக்க பணிசெய்த நீர்மைத் தொண்ட!
பேரமைந்த தமிழுலகில் பெயர்தல் இல்லாப்
பேரமைத்துப் பெயர்ந்துள்ளாய்! வாழி நின்பேர்!

நெஞ்சில் வாழ்க நிலைத்து

— மு. வில்லவன்

தனிச்சொல் தமிழ்ச்சொல்லைச் சேர்த்தொன்றாய்ப் பாடி
கனிச்சுவை ஈந்த தலைவா!—கனிசுவைத்த
நற்றமிழர் நெஞ்சினில் நீங்காது நீவாழ்ந்து
இற்றரையில் வாழ்க இனிது.

தட்டி எழுப்பி தமிழுணர்வு ஊட்டிவந்(து)
எட்டிநீ சென்றாய் கவித்தலைவா!—விட்டின்று
சென்றாலும் உன்கவிதைப் பார்க்கும் தமிழ்நெஞ்சில்
என்றென்றும் வாழ்க இனிது.

மொழிவாழ்ந்தால் வாழ்வுண்டு நற்றமிழர்க்கும்; பாரில்
மொழியழிந்தால் வாழ்வில்லை காண்பீர்;—விழிபோன்று
காப்பீர் எனவுரைத்த பாவேந்தா! நின்வழியை
காப்பவர் நெஞ்சில் புகு.

வண்டமிழர் கொண்ட மடமையை நீபோக்க
கொண்டிட்ட இன்னல் பலவுண்டு;—வண்டமிழர்
ஏற்கும் முறையறிந்து ஈந்திட்ட பாவேந்தா!
போற்றுகின்ற நெஞ்சில் புகு.

புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் அவர்கள் எழுதிய நூல்கள்.

பாண்டியன் பரிசு, அழகின் சிரிப்பு, காதல் நினைவுகள், எதிர்பாராத முத்தம், தமிழியக்கம், அமைதி, நல்ல தீர்ப்பு, குறிஞ்சித்திட்டு, சேர தாண்டவம் (நாடகம்), கழைக்கூத்தியின் காதல், சௌமியன், இரணியன் ஆகியவை.

இவரது கவிதைகளை ''பாரதிதாசன் கவிதைகள்'' என்ற தலைப்பில் மூன்று தொகுதிகளாகவும் ''இசையமுது'' என்ற பெயரில் இரு தொகுதிகளாகவும் ''இளைஞர் இலக்கியம்'' என்றும் தனித்தனியாக வெளியிட்டுள்ளார்.

அண்மையில் ''மணிமேகலை புரட்சிக் காப்பியம்'' என்னும் நூலையும் சீர் திருத்தப்பட்ட சிலப்பதிகாரத்தையும் இரு தனி நூல்களாக வெளியிட்டார்

வெண்முகிலே ! நில்மின், செல்மின்.

— புதுகை மா. நாகூரான்

1 வெண்முகிலே! வேகங்குறைமின், நில்மின் நில்மின்
வேதனையால் கூறுகிறேன் கேள்மின் கேள்மின்
ஒண்கவிதை தந்திட்ட எந்தன் மூத்தோன்
ஒளிர்கின்ற உன்னுலகில் உலவி வந்தான்
மண்ணுலகில் அதனினைவாய் அலைக்கப் பட்டு
மன்றாடும் என்செயலை அவர்க்குச் சொல்லி
விண்ணுலகை விட்டுவிட்டு இங்கே வந்து
விழிப்புள்ள என்னில்லில் வாழச் சொல்லேன்.

2 மொழியென்றால் வேம்பென்று வாழ்ந்து சாகும்
விழிகெட்ட வீணர்க்கு அறிவை யூட்ட
மொழிக்கென்று வாழ்ந்து இறந்த மூத்தோர் தம்மை
வழிகேட்க மாண்டாயோ? அன்றி யிந்த
மொழிக்காக செய்ததெல்லாம் வீணே என்று
மொழிப்பற்றை விட்டுவிட்டு விழியை மூடி
மொழியாது ஓய்வெடுக்க விரைந்தனையோ?
எனமுகிலே அன்னவரை கேள்மின் கேள்மின்.

3 பரமன்தான் நம்மொழியைப் படைத்தான் என்று
பகன்றமொழி மெய்யோவென அறிந்துகொள்ள
பரலோகஞ் சென்றவரைப் பேட்டி காண
பறந்தாயோ? பாவேந்த! அன்றி யிந்த
பரமன்மொழி பொன்னுனை பரத நாட்டின்
படும்பாட்டை அவர்க்குரைக்க ஏகினையோ?
பரவெளியில் பறக்கின்ற தென்றலேயே
பார்த்தவுடன் அன்னவரைக் கேள்மின் செல்மின்.

கவிக்குயில் எங்கே?

— நாகை சு. இளவழகன்

புயல்போல பாட்டெழுதிச் சுழல வைத்தப்
புதுச்சேரிக் கவிக்குயிலே பறந்ததெங்கே?
இயற்கையெனும் கொடும்பாவிக் குரலைக்
கேட்டோ
எழுந்தெம்மைப் பிரிந்தே நீ சென்றுவிட்டாய்

திரும்பாத பெரும்பயணம் சென்ற ஐயா
திருநாட்டை மறந்தாயோ? என்று
காண்போம்
அரும்பிவரும் தமிழுலகின் பொற்காலத்தை
அருகிருந்து பாராமல் எங்கே சென்றாய்?

அழுகின்ற எங்களையார் ஆற்ற வல்லார்?
அடுத்தபல தலைமுறைக்கும் வீர மூட்டித்
தொழுகின்ற நிலைபெற்றாய்; உன்னை இந்தத்
தொல்லுலகில் இனியென்று காண்போம் ஐயா

பாரதிக்கு தாசனென எழுந்த நீயோ
பைந்தமிழின் எதிரிகளை ஒடுக்கி வைத்தாய்
பாரதிரத் தமிழ்பாடிவந்தாய், இன்றோ
பாட்டெல்லாம் ஏட்டோடு நிறுத்திப்போனாய்!

மறையில்லாப் பொய்கையென தூய வெள்ள
மதியில்லா வானமெனத் தமிழர் நாடு
துரைநீயும் இல்லாமல் வாடுதய்யா
துடித்தெழுந்திக் குறையினையார் நீக்கவல்லார்?

பாரதிதாசனின் சங்கநாதம்

எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்
மங்காத தமிழென்று சங்கே முழங்கு!
எங்கள் பகைவர் எங்கோ மறைந்தார்
இங்குள்ள தமிழர்கள் ஒன்றுதல் கண்டே!
திங்களொடும் செழும்பரிதி தன்னோடும்
விண்ணோடும்

உடுக்களோடும்
மங்குல் கடல் இவற்றோடும் பிறந்த தமிழுடன்
பிறந்தோம்

நாங்கள், ஆண்மைச்
சிங்கத்தின் கூட்டமென்றும் சிறியோர்க்கு
ஞாபகம் செய்

முழங்கு சங்கே!

சிங்களஞ்சேர் தென்னாட்டு மக்கள்
தீராதி தீரரென் றூதூது சங்கே!
பொங்கு தமிழர்க்கின்னல் விளைத்தால்
சங்காரம் நிசமெனச் சங்கே முழங்கு!
வெங்கொடுமைச் சாக்காட்டில் விளையாடும்
தோளங்கள்

வெற்றித் தோள்கள்!
கங்கையைப் போல் காவிரிபோல் கருத்துக்கள்
ஊறுமுள்ளம்

எங்கள் உள்ளம்!
வெங்குருதி தனிற்கமழ்ந்து வீரஞ்செய்கின்ற
தமிழ்

எங்கள் மூச்சாம்!

(16ஆம் பக்கத் தொடர்ச்சி)

பாரதிதாசனின் கவிதைகள் . . .

இரவின் கூந்தலுக்கு, நிலா வயிரவில்லையாகக் கொண்டையில் அமைந்திருப்பதாக பாரதிதாசன் கற்பனை செய்திருப்பது ஓர் அபூர்வம்தான். இதுவே கற்பனைச்சிகரம். பாரதிதாசன் கவிதைகளிலே, சிறந்த சொற்றொடர்கள் ஆவேச மின்னலுடன் பாசை உலகிலே பூச்செண்டுகளாகக் காட்சியளிக்கின்றன.

"அருவிகள் வயிரத்தொங்கல்
அடர்கொடி, பச்சைப்பட்டே!
குருவிகள் தங்கக்கட்டி!
குளிர்மலர் மணியின் குப்பை!
எருதின்மேற் பாயும் வேங்கை,
நிலவுமேல் எழுந்த மின்னல்
சருகெலாம் ஒளிசேர் தங்கத்
தகடுகள் பாரடா நீ!"

மேலே நாம் காண்பது கவிதையின் சிருஷ்டி எழில், உணர்ச்சி மலர்கிறது. கற்பனை விரிகிறது பாஷை சிருஷ்டி முனையிலே (Focus) ஒளி வீசுகிறது.

அன்பர்கட்கு

பாவேந்தரைப்பற்றிய இரங்கல் பாக்களும், கட்டுரைகளும் பலவந்துள்ளன. இடமின்மையால் இவ்விதழில் இடம் பெறவில்லை. இனிவரும் இதழ்களில் வெளியிடப் பெறும். அன்பர்கள் பொறுத்தருள்க.

— ஆசிரியர்

பகுத்தறிவுப் பகலவன் பாவேந்தர் பாரதிதாசன்

கடலரசன்

புரட்சிக் கவிஞர் என்ற பெருஞ் சிறப்புக்குரிய பாவேந்தர் பாரதிதாசன் அவர்கள் தாழ்ந்துபோன தமிழகத்தின் பகுத்தறிவுப் பகலவனாகப் பவனிவந்தார். பழமைச் சமுதாயத்தைப் பாட்டால் பண்படுத்திய பெருமை அவருக்குமட்டுமே உண்டு. அடிமை வாழ்வினரை புதிய உலகு நோக்கி விரைந்துவர அழைத்தார்-அவல வாழ்வினருக்கும் அஞ்சாமைத்திறன் ஊட்டினார். இருட்டறையில் உள்ளதடா உலகம் சாதி இருக்கின்றது என்பானும் இருக்கின்றானே-வெருட்டுவது பகுத்தறிவு இலையாயின் விடுதலையும் கெடுதலையும் ஒன்றேயாகும் என்று குரல் கொடுத்தபிறகுதான் மருட்டுகின்ற மதத்தலைவரை விரட்டுகின்ற வீரமெல்லாம் தமிழ்மக்களுக்கு வந்தது. பாரதிதான்! இந்தப் பெயர் தமிழர்தம் நெஞ்சத்தில் இடம் பெற்ற காலம் ·(19 8-39 முதல் இந்தி எதிர்ப்புப்போராட்டம் கிளர்ந்தெழுந்த நேரம்!' இந்தி எப்பக்கம் வந்து புகுந்துவிடும் - எத்தனை பட்டாளம் கூட்டிவரும் தீங்குள்ள இந்தியை நாம் எதிர்ப்போம் பங்கம் விளைந்திடில் உங்கள் தாய்மொழிக்கே பச்சைரத்தம்பரிமாறிடுவோம்! நீங்கள் எல்லோரும் வாருங்கள் நாட்டினரே!' என்றெல்லாம் கவிஞர் கனகசுப்புரத்தினம் தமிழர்களை அழைத்தார். தமிழ்க்கடல் மறைமலையாரும், தமிழ்த்தென்றல் திரு வி க. வும் தமிழர் தலைவராக இருந்த பெரியாரும், படைநடத்திப் பெருமையுற்ற அஞ்சாநெஞ்சன் அழகிரியும் பாரதிதாசனின் போர்ப் பாட்டுக்களையே மொழிப் போரின் குரலாகக் கொண்டனர். தன்மான இயக்கத்தின் தளபதிகள் பலரில் ஒருவராக கவிஞரும் உயர்ந்தார். அவரது ஆற்றலை அறிவுச் செல்வத்தை, புலமை விவரத்தை, புரட்சியின் வளர்ச்சியை, இதயத்தின் விடுதலை வேட்கையை வீரப் பண்ணிசைக்கும் பாவேந்தரை தமிழக மக்களின் இதயத்திற்குக் குடியேற்றிய அரும்பணி அறிஞர் அண்ணா அவர்களுடையதாகும்! பள்ளியாசிரியராக இருந்த பாவேந்தரை பைந்தமிழகத்தின் புரட்சிக் கவிஞராக, அவரைச் சூழ்ந்திருந்த அரசியல் இருளையும் தேசியத் திரையையும் கிழித்து, வெண்ணிலா உலாவுக்கு உதவியவர் அண்ணாதாம்.

இருபதாண்டுகளுக்கு முன்னால் இன்றைய தமிழகம் இல்லை. தமிழர் தலைவர்களுக்கு இன்றுள்ள சிறப்பு அன்றில்லை. அதிகாரம் அடக்குமுறை இவற்றின் அணைப்பு மட்டுமன்று; அக்கிரகாரப்பெருமையென்று ஒன்றிருந்தால் தான் அறிஞர்களும் மதிக்கப்பட்ட காலம்! தேசிய மாயையும் ஆரிய மோகமும் ஆதிக்க வல்லாரிகளை ஆட்டிப் படைத்திட்ட காலமாகும். 1945-ஆம் ஆண்டில் பாரதிதாசன அவர்களுக்கு தமிழர்கள் பொற்கிழியும் பொன்னாடையும் வழங்கினர். ரூ 25000 பணமுடிப்பு வழங்கிய விழாவில் பன் மொழிப் புலவர்களும் பல்வேறு அரசியல் துறையினரும்கூடினர்; வாழ்த்தினர். வெள்ளம் போல் தமிழர் கூட்டம் என்ற கவிஞரின் சொல் அன்றுதான் செயல்பட்டது? பெரியார் இராமசாமி அறிஞர் அண்ணா. பேராசிரியர் சேதுப்பிள்ளை, ம.பொ சிவஞானம்; செங்கல்வராயன், சிவானந்தம், நாவலர் நெடுஞ்செழியன் உமர்நாத்து எண்ணற்றோர் அவரவர் நிலைக்கேற்ப கவிஞரைப் பாராட்டினர் திராவிடர்கழக முகாமிலே இருந்தாலும் தாயகத்தின் புகழ் வளர்க்கும் வல்லவர்களில் ஒருவராக மதிக்கப்பட்டார் பெரியாரும் கவிஞரும் அண்ணாவும் என்ற அழகான சொற்றொடர் இடைக்காலத்தில் அழிந்துபோனது வேதனைக்குரியதாகும்! பாமரர் இதயம் முதல் பல்கலைக்கழக மண்டபங்கள்வரை பாரதிதாசன் பாடல்களும் படங்களும் எழில் செய்தன. அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் அன்றைய துணைவேந்தர் பேராசிரியர் எம். இரத்தினசாமி அவர்கள் தலைமையில் புரட்சிக் கவிஞரின் படத்தை அறிஞர் அண்ணா அவர்கள் என்றும் மறக்கமுடியாத இன்றும் சிறப்புக்குரிய உரை நிகழ்த்தித் திறந்து வைத்தார்கள்! "ஏ! தாழ்ந்த தமிழகமே!" என்ற புத்தக வடிவில் இருப்பது அந்தப் பேருரைதான்! "உண்மைக்கவிஞனைப் போற்று! உயிர்க் கவிஞனைப் போற்று! உயிர்க்கவிகளைப்போற்று! புரட்சிக் கவிகளைப்போற்று! புதுமைக்கவிகளைப் போற்று! புத்துணர்ச்சி கவிஞரைப் போற்று! தருக்கரின் பிடியிலே சிக்கிவிட்ட தாழ்ந்த தமிழகமே! தலை நிமிர்ந்து நில்! தாயக விடுதலை விரும்பும் வீரக்கவிகளைப் போற்று! என்றெல்லாம் அண்ணா வேண்டினார். மறுமலர்ச்சித் தமிழகத்தில்.

பாரதிதாசன் பரம்பரை உயர்ந்தது! புரட்சிக் கவிஞர்பாரதிதாசன் தனது கவிதைப்பணியினைக்கழகப்பணியாக உருவாக்கினார். தமிழகமெங்கும் அவர் தம் கவிதைக் குரல்கேட்டது! பல்கலைக் கழகத்திலேயிருந்து தமிழகமெங்கும் புயலெனச் சுழன்ற நெடுஞ்செழியன் கவிஞரின் கவிதைகளை எங்கும் எடுத்துச் சொன்னார்.

"வலியோர் சிலர் எளியோர்தனை வதையே புரிகுவதா
மகராசர்கள் உலகாளுதல் நிலையாம் எனும் நினைவா
கொலைவாளினை எடடா மிகு கொடியோர் செயல் அற"

என்ற உணர்ச்சியுரையைக் கேட்டவர்கள் விடுதலைக் கிளர்ச்சிக்குத் தம் உடலுழைப்பினைத் தந்துதவினர்.

"வெங்கொடுமைச் சாக்காட்டில் விளையாடும்
தோளெங்கள்
வெற்றித் தோள்கள்......சங்காரம் நிசமெனச்
சங்கே முழங்கு"

என்ற செந்தமிழ்த் தேன்சுவைப் பாடலை எத்தனை தரம் கேட்டாலும் இன்னும் தெவிட்டாதே! பேராசிரியர் அன்பழகன் அவர்களது திருமண வாழ்த்துச் செய்தியாக புரட்சிக் கவிஞர் பாடினார்! அந்தப்பாட்டு தமிழர் தம் மங்கிய உணர்வை தயங்கிய உள்ளத்தைக் கிளரச் செய்தது! "பூட்டிய இரும்புக்கூட்டின் கதவு திறந்தது. சிறுத்தையே வெளியே வா-எலியென உனை இகழ்ந்தவா மருள புலியென செயல்படு!" என்றெல்லாம் அவர் சொன்ன பொன்மொழிகள் அறிவியக்கப் பணிவாளர்களுக்கு படைக்கலன்களாக அமைந்தன. திராவிடர் கழக அரசியல் கலகக்களங்களைக் கண்டவர் கவிஞர்! புதுவையில் காலிகள் அவரை கல்லால் அடித்தனர்-கருஞ்சட்டையை கிழித்தனர்-கலைஞர் கருணாநிதியும் அப்போதுதான் அடிபட்டார்! அன்றைய மாநாட்டு நிகழ்ச்சியின்போது பிற்பகலில் அழகிரி அவர்கள் பேசும்போது "காலையில் நான் வராதபோது நடக்கக்கூடாத நிகழ்ச்சிகள் நடந்ததாகக் கேள்விப்பட்டேன். நடந்தவைகள் நடந்தவைகளாகவே இருக்கட்டும்; இனி நடப்பவை நல்லவைகளாகமலரட்டும் அன்றோர் நாள் சாக்ரடீசை நஞ்சூட்டிக் கொன்றுவிட்ட பின் இன்றுவரை சாக்ரடீசைத் தேடுகிறார்கள். நமக்கொரு சாக்ரடீசு கிடைக்கவில்லை. அன்றோர்நாள் ஆப்ரகாம்லிங்கனைச் சுட்டுக்கொன்றுவிட்டபின் இன்றுவரை லிங்கனைத்தேடுகிறார்கள்; ஆனால் நமக்கொரு ஆப்ரகாம் லிங்கன் கிடைக்கவில்லை. இன்றும் நமது புரட்சிக் கவிஞரைக் கல்லால் அடித்துக் கொன்றுவிட்டால், பின்னால் பல ஆண்டுகள் நமக்கொரு புரட்சிக் கவிஞர் கிடைக்கவில்லையே என்று கொன்றவர்களே வருந்தப்படுவார்கள் என்று நெஞ்சத்தின் அதிர்ச்சியைக் கண்ணீரால் காட்டினார். கல்லால் அடித்த புதுவை மக்கள் கவிஞரை மக்கள் அணியின் தூதுவராகச் சட்டமன்றம் அனுப்பினர். பணியாற்றினார்; பாராட்டுரைகள் பலபெற்றார். மக்கள் கவிஞராக மறுமலர்ச்சித்தென்றலாகத் தமிழ்ப்பகைவரின் வைரியாக, வைரம் பாய்ந்த உள்ளத்தவராக உழைத்தார் உயர்ந்தார்! தமிழகத்தின் சிற்றூர் அனைத்தும் புரட்சிக் கவிஞரின் பண் பாடின! பாண்டியன் பரிசு, இசையமுது கவிதை தொகுப்புகள். தமிழியக்கம், சேரதாண்டவம், தமிழச்சியின் கத்தி, பொன்முடி தன் காவியம், கவிதை கட்டுரை ஆராய்ச்சியுரைகள் என்ற நீண்ட பட்டியல் நினைவிலே நிற்பவைகள்தான்! பாவேந்தர் பாரதிதாசன் 'குயில்' என்ற கவிதை இதழ் இன்பத் தமிழ்ச் சுரங்கம்-சுவைசொட்டும் சுவடியாக இன்றும் இலங்குகின்றன! எழுத்தால் வடிக்க இயலாத ஏற்றமும் சிறப்பும் புகழும் கொண்டிருந்த புரட்சிக்கவிஞர் தமது 73வது அகவையில் திராவிடத்திரு நாட்டின் மக்கள் எல்லாம் கண்ணீர் வடிக்க 21—4—64ல் பிரிவுற்றார்! மணிவிழாக்கண்ட மாபெரும் கவிஞரை மறக்கமுடியாத நாம் மாண்டசெய்தியையும் கேட்டுவிட்டோம் "வளமார் எமது திராவிடம் வாழ்க வாழ்கவே" எனக் கவிஞர் வாழ்த்திய தாயகத்தின் விடுதலை விரும்பும் மக்கள் வீழ்ந்தாலும் பாவேந்தரின் பாக்கள் பாசமுள்ளவர் தம் நேச உள்ளங்களில் தவழும்! பாரதிதாசரின் மரபு பார் முழுதும் புகழ்பரவ பாடிச்செல்லட்டும்!

(1—4—64 இதழின் தொடர்ச்சி)

அலுவலகங்களில் ஆட்சித் தமிழ்

— க. சகன்னாதன்

எனவே, தமிழை ஆட்சி அலுவலகங்களில் வெற்றிகரமாகக் கையாள முடியாமல் அலுவலர்கள் இன்று அலமந்து நிற்பதற்கு, அவர்களது நெஞ்சகத்தை விட்டுத் தமிழ் பிரிந்து, அந்த இடத்தில் ஆங்கிலம் குடிகொண்டு தன்னதிகாரம் செலுத்தி வருவதும் தான் என்பது நன்கு புலனாகும். இதற்கு அடிப்படைக் காரணம் அயல் மொழியான ஆங்கிலம் ஆட்சி அரியணையேறி ஏறத்தாழ நூற்றைம்பது ஆண்டு காலம் வாழ்ந்து தாய்மொழியாம் தமிழை அடிமை மொழியாக்கி வைத்திருந்ததும் தான் என்பதும் வெள்ளிடை மலை.

இவ்வாறு ஆங்கிலக் கலப்போடு தமிழைப் பேசுவதும் அல்லது ஆங்கிலத்திற்கு முதன்மை யளித்துப் பேசிக் கொண்டிருப்பதும் தான் சிறப்பு, மரியாதை என்றெல்லாம் ஆட்சி அலுவலர்கள் நினைத்து அந்நிலை நீடித்துக் கொண்டே போக அனுமதித்தால், நாளடைவில்-தமிழுடன் வடமொழி கலந்து உறவாடியதால் ஏற்கனவே மலையாளம் தெலுங்கு, கன்னடம், துளுவம் என்று புதுப்புது மொழிகள் தோன்றிப் பிரிந்து போனதே போன்று, ஆங்கிலக் கலப்பின் காரணமாக இன்னொரு புதிய மொழி தோன்றி தமிழினின்றும் பிரிந்து தூய தமிழ் மொழிகு வோரின் எண்ணிக்கை மேலும் குறுகினாலும் வியப்பதற்கில்லை. அன்றியும் தமிழ் மொழியே உருச் சிதைந்து பல மாற்றங்கள் பெற்று வேறொரு மொழியாக மாறிடினும் புதுமையில்லை. இத்தகைய ஒரு இடர்மிகு நிலைக்கு ஆட்சி அலுவலர்கள் இனிமேலேனும் அடிகோல மாட்டார்கள் என்று நாம் நம்புவதோடு இது போன்ற தமிழ் மொழிச் சிதைவுக்கு ஆக்கம் தராத வகையில் தூய தமிழிலேயே பேச முற்படவேண்டும் என்று பணிவன்புடன் வேண்டுவோமாக.

இனி, ஆங்கில நாட்டார் இங்கு வந்து நாட்டையும் மொழியையும் அடிமை கொள்ளாமல் இருந்திருந்தால், இன்பத்தமிழ் மொழியாம் தாய்மொழி தமிழ் நாட்டின் முடியுடை மூவேந்தர்கள் காலத்தில் வாழ்ந்து வளம் பெற்றிருந்தது போன்றே தொடர்ந்து இன்று வரை ஆட்சித் தமிழாக வளர்ந்திருக்குமானால் இன்றைய நாள் எத்தகு சீரிய நிலையில் அது செழிப்புற்று விளங்கியிருக்க முடியும் என்பதைச் சற்றே எண்ணிப் பார்ப்போம்

முடியுடை மூவேந்தர்களின் சிந்தையிலும் வாய்மையிலும் மலர்ந்து விரிந்து மணம் பரப்பிய செந்தமிழ், அவர்களது வில், கயல், புலி இலச்சினைகள் தாங்கிய முக்கொடிகள் எங்கெங்கெல்லாம் பட்டொளி வீசிப் பறந்தனவோ அங்கெல்லாம் இன்பத்தேன் வாரியாக மதுரத் தமிழோசை ஒலித்து வளர்ந்திருந்தது. பிற நாட்டாரை வெற்றி கொண்டு அவர்கள் மீது ஆட்சி செலுத்தும் மனப் பான்மையுடன் அன்று, ஆழ்ந்து அகன்ற நட்புரிமையுடன், நம் தமிழகத்தின் அன்பையும் பண்பையும் சேர்த்து எடுத்துச் சென்று முழங்கியது கங்கைக் கரையிலும், ஈழத்திலும் கடாரத்திலும், சாவகத்திலும்' யேற்கே மத்திய தரைக் கடலை யடுத்துள்ள பூபாகத்திலும் எல்லாம் தமிழ் முழங்கி மனித நாகரிகத்திற் கெல்லாம் முதன்மையாக விளங்கிய தன் பழம் பெருமையையும் அதன் அழியாத கன்னித் தன்மையையும் எடுத்துப் பறைசாற்றி நின்றது. இன்னும் கூட கீழை நாடுகளில் நமது பழம் பெரும் நாகரிகத்தின் சின்னங்களையும், அடிச் சுவடுகளையும் காண முடிகிறது மேலை நாடுகளிலும் மிகப் பழமை வாய்ந்த மொழிகளாம் கிரேக்கம், ஈபுரு போன்றவற்றில் கூட நமது தமிழ்ச் சொற்கள் விரவிக் காணக் கிடைக்கின்றன என்று மொழி நூலாய்வு வல்லுநர்கள் பெருமையுடன் கூறுகின்றனர். ஆங்கிலப் பேரரசன் ஈராசு போன்றவர்கள் எல்லாம் நம் பழந் தமிழ் மொழியின் இயல்பைச் சிறப்பித்துக் கூறு நின்றனர்.

இத்தகு சிறப்பு மிக்க பழந்தமிழ் மொழியாம் நம் தாய்மொழி இயற்கை ஒலிகளை ஒட்டி, அவற்றை அடிப்படையாக வைத்துப் பிறந்த மொழியாகும். இது யாரால் முதலில் உருவாக்கப் பெற்றது என்று யாராலும் ஆய்ந்து கூறுதற் கரிதாம். ஆகவேதான் இதன் பெருமையை உணர்த்த வந்த பெருங் கவிஞன் சுப்பிரமணிய பாரதி.

"ஆதிசிவன் பெற்று விட்டான்" என்றே பாடி விடுகிறான். அத்துடன் "வானமளந்த தனைத்தும் அளந்திடும் வண்மொழி வாழியவே." என்று அதற்கு வாழ்த்துக் கூறுகிறான். இவ்வாறு இயற்கை யொலிகளை ஒட்டி யெழுந்த இயல் மொழியாக இது இருப்பதால் தான் பிற மொழிச் சொற்கள் பல இதனுடன் கலந்து விட்ட போதிலும் என்றும் கன்னியிளமைப் பொலிவோடு காட்சி தருகிறது.

எனினும் எறும்பு ஊறக் கல்லும் கரையுமன்றோ? எத்தகு சிறப்பு மிக்க மொழியாயினும் அத்துடன் பிற மொழிச் சொற்கள் அளவுக் கதிகமாகக் கலந்து விடுமானால், அது நாளடைவில் சிதைந்து உருமாற்றம் பெற்றுத் தேய்ந்துவிடும் என்பது தெளிவு. ஆகவே தாய்மொழியாம் தமிழ் அதன் எழில் என்றும் சிதையாமல் இனிமையுடன் திகழவேண்டுமானால் அதன் தூயதன்மையைக் கட்டிக்காக்கவேண்டியது முதன்மையானது. குறிப்பாக அலுவலகங்களில் தமிழைக் கையாளுவதில் ஓரளவு கவனம் செலுத்த வேண்டும். ஆட்சி அலுவலர்களுக்கு இத்துறையில் பெரும் பொறுப்பு உண்டு!

[தொடரும்]

மே முதல் நாளை பாரதிதாசனார் நினைவுநாளாகக் கொண்டாடுவீர்!

நாவலர் வேண்டுகோள்:

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் இயற்கை எய்தினார்; மறைந்துவிட்டார்! அவருடைய எடுப்பான தோற்றத்தை இனி காண முடியாது! செஞ்சொற் கவிதை இன்ப ஊற்று அவரது எழுதுகோலிலிருந்து இனி பீரிட்டெழும்பாது; அவர் கால வெள்ளத்தால் அடித்துக் கொண்டுபோகப்பட்டார் — என்பதையெல்லாம் எண்ணவே நெஞ்சம் கூசுகிறது; சொல்ல நா தழதழக்கிறது!

தமிழகத்தில் இருபதாம் நூற்றாண்டின் ஈடும் எடுப்பும் அற்ற ஒரு பெரும் தமிழ்க் கவிஞரெனத் திகழ்ந்த புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்களின் மறைவு பொதுவாகத் தமிழகத்திற்கு குறிப்பாக கவிஞர் உலகிற்கு ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும்.

"சிற்றூரும் வரப்பெடுத்த வயலும் ஆறு தேக்கிய நல் வாய்க்காலும் வகைப்படுத்தி நெற்சேர உழுதுழுது பயன் விளைத்த நிறையுழைப்புத் தோள்கள் எவரின் தோள்கள்?"

எனக்கேட்டு —

"கண்டதெல்லாம் தொழிலாளி செய்தான்; அவன் காணத்தகுந்தது வறுமையாம்? அவன் பூணத்தகுந்தது பொறுமையாம்"

-என்றெல்லாம் வினவி, தொழிலாளர் நலனுக்காகப் புரட்சிக் குரல் எழுப்பிய புரட்சிக் கவிஞர் மறைந்துவிட்டார்! எனவே தொழிலாளர் நலன் கருதி கொண்டாடப்படும் இவ்வாண்டு 'மே' நாள் விழா புரட்சிக் கவிஞரின் நினைவு நாளாக அமைவது சாலப்பொருத்தமுடையதாகும்."

மே நாள் விழாவோடு புரட்சிக் கவிஞரின் நினைவு நாளையும் இணைத்துக் கொண்டாடுமாறு தமிழகத்தாரைக் கேட்டுக்கொள்கிறேன்.

குறள் நெறி
தமிழ் வாழ்க

மலர் 1 | சித்திரை 19 (1-5-1964) | இதழ் 8

உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல்
அனைத்தே புலவர் தொழில்.

புரட்சிக் கவிஞர் புகழுடல் எய்தினர்

தமிழிலிலக்கிய வானில் எழிலுறு ஞாயிறாக இலங்கித் தம் இன்றமிழ்ப் பாக்கதிர்களால் மூட நம்பிக்கை இருளைப் போக்கிக்கொண்டிருந்த புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் சித்திரைத் திங்கள் 9ஆம் நாளில் (21-4-64ல்) பூதவுடல் நீக்கிப் புகழ்உடல் எய்திவிட்டார். அச்சமின்றி ஆண்மையுடன் அடிமை நிலையை எதிர்த்து அழகியபாடல்களை எழுதிய கைகள் அயர்ந்துவிட்டன; சூழ்ந்திருப்போர் விருப்பு வெறுப்பினை நோக்காது உள்ளத்தில் தோன்றியனவற்றை ஒளிமறைவின்றி முழங்கிய வாய் ஓய்ந்துவிட்டது, எழுபத்துமூன்று ஆண்டுகள் இவ்வுலகில் நடமாடிய கால்கள் சாய்ந்துவிட்டன. இனி நாம் ஏறனைய பீடு நடைப்பெரும் புலவரைப் பூத உடலில் யாண்டுமே காண இயலாது. ஒப்பாரும் மிக்காருமின்றி உயர்பெரும புரட்சிக் கவிஞராய் மக்களுளங்களில் இடம்பெற்றிருந்த பாரதிதாசனார் பாரைவிட்டுப் பிரிந்துவிட்டார்.

''நெருநல் உளன் ஒருவன் இன்றில்லையென்னும்
பெருமையுடைத்தன்றே இவ்வுலகு''

பலவகை மூட நம்பிக்கைகளால் பாழ்பட்டிருந்த தமிழக மன்பதையை உய்விக்கத் தோன்றி உலையாது பணியாற்றிய **பெரியார் ஈ. வே. இராமசாமி** வழிநின்று புதுமுறைத் தமிழ்ப் பாடல்களைக் கருவியாகக்கொண்டு சாதிக்கொடுமை, பெண்ணடிமை, புரோகிதப் பாம்பு முதலியவற்றை எதிர்த்துப் போராடிப் புகழ்பெற்றார். சங்ககாலப் புலவர்களைப் போன்றும் இற்றைநாள் மேனாட்டுக் கவிஞர்களை ஒத்தும் இயற்கையையும் மக்கள் வாழ்வையுமே பாடற்பொருளாகக்கொண்டார். எத்துறையிலும் அடிமைப்போக்கை மறுத்து முழங்கியமையால் ஆங்கிலப் புலவர்களில் செல்லி, பைரன், வேர்ட்சுவொர்த்து போன்றவர்கட்கு ஒப்பாகப் போற்றப்பட்டார்.

ஏனையநாடுகளில்தோன்றியிருப்பரேல் இவர்க்கு உலகப்பெரும் புகழ் எளிதில் கிட்டியிருக்கும். தம்மவரை மதிக்காத தமிழ்நாட்டில் தோன்றிவிட்டார்.

அயல்நாட்டு ஆங்கிலப் புலவராம் சேக்சுபியரின் நானூறாவது ஆண்டுவிழாக்கொண்டாட்டத்தில் ஆர்வம் காட்டும் நம்நாட்டுஇதழ்கள் அதில் நானூற்றில் ஒரு பங்கு கூட அவர் மறைந்த செய்தியை வெளியிட்டு வணக்கம் செலுத்துவதில் ஆர்வம் கொண்டில. கவிஞராக மட்டுமின்றி நாடகஆசிரியராகவும் திரைக்கதை, உரையாடல் எழுதும் கலைஞராகவும், சீர்திருத்தப் பெரியாராகவும் திகழ்ந்த இவரை நாம் என்றும் மறத்தற்கின்று.

தமிழ்மொழியினிடத்தில் தணியாத ஆர்வமும் அதைக் காத்து ஓம்புவதில் உலையா முயற்சியும் உடையவர்.

''யாம் அறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்
இனிதாவது எங்கும் காணோம்''

என்று உண்மையை ஒளியாது கூறிய அவரது குருவெனக் கருதப்படும் தேசீயப் பெரும் புலவர் பாரதியாரினும் பாவேந்தர் பாரதிதாசனின் தமிழ்ப் பற்று அளவிட்டுரைக்க இயலாததாகும். பாவேந்தர் இயற்றியுள்ள 'இன்பத்தமிழ்'' எனும் பாடலும், ''தமிழியக்கம்'' நூலும் தக்க சான்றுகளாகும்.

"இன்பத்தமிழ்" எனும் பகுதியில்

' தமிழுக்கும் அமுதென்றுபேர்-அந்தத்
தமிழ் இன்பத்தமிழ் எங்கள் உயிருக்கு நேர்.''

''தமிழ் எங்கள் இளமைக்குப் பால்-இன்பத்
தமிழ் நல்ல புகழ்மிக்க புலவர்க்குவேல்''

''தமிழ் எங்கள் பிறவிக்குத்தாய்-இன்பத்
தமிழ் எங்கள் வலமிக்க உளமுற்றதீ''

என்று அவர் தமிழார்வம் பொங்கிப் பொலிவதைக் காணுங்கள்

தமிழியக்கத்தில் பல்வேறு நிலையில் உள்ளவர்களும் தமிழ்ப்பற்றும் புலமையும் உடையோராய்த் தமிழைக்காத்தல் வேண்டும் என்பதை அழகுற ஆண்மையுடன் எடுத்தியம்பியுள்ளார்.

"**அரசியல் சீர்வாய்ந்தார்**" எனும் பகுதியில்

''தமிழாய்ந்த தமிழன்தான் தமிழ்நாட்டில்
முதலமைச்சாய் வருதல் வேண்டும்
தமிழ்ப் பகைவன் முதலமைச்சாய்த் தமிழ்நாட்டில்
வாராது தடுத்தல் வேண்டும்''

என்று அறைகின்றதை அறிமின்.

இந்தி முதன்மையை எதிர்த்துப் புலவரை நோக்கிப் பின்வருமாறு அழைப்பு விடுத்துள்ளார்.

''சொந்தமொழி பயின்றிடற்குத் திட்டம் செய்யார்
சோதாக்கள், சிறுதலைகள், ஒன்றுசேர்ந்தே
இந்தியினைப் பொதுமொழியாய்க் கொள்கவென்றே
இந்நாட்டில் வற்புறுத்தல் செய்தார் அந்தோ!
இந்தியிலே இலக்கணமோ கலைப்பெருக்கோ
எள்ளளவும் கிடையாதே! ஆளவந்தார்
செந்தமிழ்க்கு வல்லாருய் வாய்த்தார் என்ற
செய்தியினை யறிந்தாலே சிரிக்கும் வையம்
கொந்தளிக்கும் தமிழ்ப் புலவீர்! தமிழைத் தீயார்
கொன்றழித்தால் நும்வாழ்வு சிறப்பதெங்கே?
செந்தமிழைக் காத்திடற்கு நீவிரெல்லாம்
சேர்ந்தொன்றாய்க் களநோக்கி விரைந்து வாரீர்.''

இவ்வாறு தமிழைக் காக்க அல்லும் பகலும் அயராது உழைத்த அரும்பெரும் பாவலர் இவ்வவனியினின்றும் அந்தோ அகன்றுவிட்டாரே! அன்னைத் தமிழ்காக்க இனியாருளர்?

புரட்சிக்கவிஞரின் தமிழியக்கம் — வெற்றிவேலன்

தமிழ் மகனே,

திரைகடல் ஓடித் திரவியம் காண இருண்ட கண்டம் இலங்கை பர்மா சென்றாய்; உழைத்தாய்; கல்லை உடைத்தாய்; பிற நாட்டின் முன்னேற்றம் கருதி மாட்டினும் இழிவாய் முனைந்து உழைத்தாய்! ஈட்டியதென்ன? இழி சொல் பகைமை காட்டி நின்றனர், உன் உழைப்பால் உயர்ந்தோர்! அயர்வைக் கருதாது வியர்வை சிந்தி உயர்வைக் கருதி உழைத்தாய் பிறருக்கு! உன்றன் நேர்மையை உணர்ந்த மாற்றார் குன்றா உழைப்பை உறிஞ்சி உயர்ந்தனர்; சாற்றைப் பிழிந்து சக்கை எறிவது உலகின் இயற்கை; பாலைக் கறந்து, பின் பசுவைக் கொல்லும் கயமை ஒப்ப முரடர் உன்னை விரட்டி அடித்தனர்; உழைத்ததன் பயனை நுகரவாய்ப்பற்றாய்! குன்றா உழைப்பினை; குண்டடிபட்டாய்! இனவெறி மொழிவெறிஇவற்றால் செத்தாய்! புரக்கவேண்டிய தாய்நாடு உன்னைப் புறக்கணித்தது! விரட்டப்பட்டோடி வந்தாய்! வரவேற்கவில்லை, உன் தாய்த் திரு நாடு! நற்றமிழ் இனமே, நசிந்திடுகின்றாய்! "தமிழச் சாதி தரணி மீதிராது பொய்த்தழி வெய்தலோ முடிபு" எனக் குமுறி நின்றார் கவிஞர் பாரதியார்!

"பாமரராய் விலங்குகளாய், இகழ்ச்சி சொலப் பான்மை கெட்டு, நாமமது தமிழரெனக் கொண்டிங்கு வாழ்ந்திடுதல் நன்றோ? சொல்வீர்! விழித்தெழுவீர்! செம்புக்கும் கொம்புக்கும் அஞ்சி நீங்கள் சிற்றடிமைப் படலாமோ? பொங்கி எழுங்கள்! புவியில் நம் இனத்தை மங்காப் புகழுடன் இலங்கிடச் செய்வீர்"

என இடித்து உரை கூறிய இன் தமிழ்க் கவியின் சொல்லைக் கேட்டீரல்லீர்!

"வெங்கொடுமைச் சாக்காட்டில் விளையாடும் தோளெங்கள் வெற்றித் தோள்கள்! வெங்குருதி தனிற் கமழ்ந்து வீரஞ் செய்கின்ற தமிழ் எங்கள் மூச்சாம்!" என முழங்கி நின்றார்! திங்களொடும் மங்குல் கடல் இவற்றோடும் பிறந்த நாம் ஆண்மைச் சிங்கத்தின் கூட்டமென்று முழங்கினார், பழம் பெருமை வீழ்ந்தொழிந்த கிரேக்கத்தைக் கிளர்ந்தெழுப்பிய கவி பைரன் போல! (Byron-The Isles of Greece)

'தமிழியக்கம்' கண்ட அவர் தகைமை பெரிது!

> இன்பத் தமிழ்க் கல்வி யாவரும் கற்றவர்
> என்றுரைக்கும் நிலை எய்தி விட்டால்–
> துன்பங்கள் நீங்கும், சுகம் வரும். நெஞ்சினில்
> தூய்மை உண்டாகிடும், வீரம் வரும்"

என்று அந்தப் புத்துணர்வாளர் புகன்ற மொழி கேளாயோ? பாழ்பட்டு நின்ற இந்தப் பாரததேசந் தன்னை வாழ்விக்கப் பாடினார் பாரதி! அவரது தலைமாணவர் பாரதிதாசனாரும் பாரத நாட்டில் தமிழரின் தாழ்வைப் போக்குதலை நாட்டத்திற் கொண்டு "பூட்டிய இரும்புக் கூண்டின் கதவு திறக்கப்பட்டது! சிறுத்தையே வெளியே வா!" என உரிமை பெற்ற பாரதநாட்டில் அருமைத் தமிழனுக்கு ஆணையிட்டார். கேட்டார்ப் பிணிக்குந்தகைய வாய்க் கூறினார்:

> "வாழிய நீ! தமிழ்த்தாய்க்கு
> வரும் பெருமை உன் பெருமை
> வயிற்றுக் கூற்றக்
> கூழின்றி வாடுகின்றார்;
> எழுந்திரு நீ! இளந்தமிழா,
> குறை தவிர்க்க
> ஆழிநிகர் படைசேர்ப்பாய்
> பொருள் சேர்ப்பாய்! இன்பத்தை
> ஆக்குவிப்பாய்!
> ஊழியஞ் செய் தமிழுக்குத்
> துறைதோறும் துறைதோறும்
> உணர்ச்சி கொண்டே"

என உரைத்து நின்றார். கண்டதென்னே? உணர்ச்சியில்லை தமிழரிடை! ஆயிரம் ஆயிரம் சின்னச் சாமிகள் தீயிடைக் குளிப்பினும் திருந்துவீரல்லீர்! பேயினும் கொடியதாய்ப் பணத்தாசை ஒன்றே கொண்டீர்! வயிறே பெரிதென வளர்த்து நிற்கிறீர்! வண்டமிழ் வளர்க்கும் வகையறியீர்! மெய்யுணர்வில்லையே! தமிழுக்குப் பகைவர் எவர் எனத் தேர்ந்திடும் வகையறியீர்! அரசியலையும் மொழியையும் குழப்பிக் குழப்பி அரசியல் துறை எது மொழித் துறை எது எனத் தேர்ந்திடும் அறிவிலீர்!

கப்பற் படை கொண்டு கடாரம் வென்றோர் பர்மாவிலிருந்து திக்கற்றவர்களாகப் பாரதம் புகுதற்குக் கப்பல் வசதி கேட்டார் மத்திய அரசினரிடம்! கிடைக்கப் பெற்றிலர்! ஒரு மொழி வைத்து உலகாண்ட தமிழர் மும்மொழி கற்றாலன்றி வேலையில்லை! பிழைப்பில்லை! தன்னினம் உயரத் தளராது உழைத்தவர் தான் வாழ்ந்தாற் போதுமென்றின்று நினைக்கிறார்! இன்பத் தமிழ்க் கல்வி கற்றவர் யாவரும் வறுமைத் துன்பத்தில் ஆழ்கிறார்! ஆங்கிலக் கல்விக்கே அரசினர் ஆதரவு!

இந்நிலை மாற்றிட, நன்னிலை எய்திட அயராது உழைத்தல் வேண்டும்! தூங்கிப் பயனில்லை! வள்ளுவர் வான்குறள் ஐ. நா. அவையிலே முழங்குதல் வேண்டும்! தெள்ளுதமிழ்க் காப்பியங்களை எல்லாத் தேயத்தவர்களும் கற்று மகிழ வேண்டும்! அறிவியலின் உச்சாணிக் கிளையில் அமர்ந்திருக்கும் உலகில் அறிவியல் இன்றிக் கல்வியில்லை! தமிழில் அறிவியற் கலைகள் வேண்டும்! தமிழிசை உலகெலாம் ஒலிக்க வேண்டும்! கோயிலில் இறைவனைத் தூய தமிழில் வழிபட வேண்டும்! கல்லூரிகளில் தமிழ்க் கல்வியையே கற்க, கற்பிக்க வேண்டும்! தமிழாய்ந்த தமிழன் தான் தமிழ் நாட்டில் முதலமைச்சாய்த் திகழவேண்டும்! தமிழ்ப் புலவர் ஒன்றுபடும் நன்னாள் வருதல் வேண்டும்! வையம் அறிமொழியதாகத் திருமலிந்த தமிழ் மொழிதான் ஆகும் வகை நம் புலவர் சேர்ந்து தொண்டுபுரிய வேண்டும். செல்வர்கள், தமிழறிஞர் கழகங்கள், தமிழ்ப் பள்ளி கல்லூரி, தமிழ் ஏடு பலப்பலவும் நிறுவ வேண்டும்!

இதுவே புரட்சிக் கவிஞர் கண்ட "தமிழியக்கம்." இனியும் தூங்கி இழி நிலை எய்திட வேண்டாம்!

> எது செய்க நாட்டுக்கே
> எனத் துடித்த சிங்கமே!
> இன்றே, இன்னே,
> புது நாளை உண்டாக்கித்
> தமிழ் காப்பாய் புத்துணர்வைக்
> கொணர்வாய் இங்கே!
> அதிர்ந்தெழுக! தமிழுக்குத்
> துறைதோறும் துறைதோறும்
> அழகு காப்பாய்!

-புரட்சிக் கவிஞர்

ஆர்க்கிமிடிசு

(Archimedes)

— தி. சி. கருப்பண்ணன், எம். ஏ.

மழை பெய்கிறது. கதிரவன் காய்கிறது. இவற்றால் மண்ணில் பூற்பூண்டுகள் பயிர் பச்சைகள் முளைத்துத் தழைக்கின்றன, இன்னோரன்ன பல்வேறு நிகழ்ச்சிகள் இயல்பாய் நடைபெறுகின்றன மழை எங்கிருந்து உருவாகின்றது? காயும் கதிரவன் எவ்வாறு இயங்குகின்றது? மண்ணினிருந்தும் புற் பூண்டுகள் எப்படித் தோன்றி வளர்கின்றன? இத்தகைய வினாக்கள் நம் மனத்துள் எழுவதில்லை. நாம் இவற்றையெல்லாம் இயற்கை யெனக் கூறி மேனோக்கோடு விட்டு விடுகின்றோம். ஆனால் ஒரு விஞ்ஞானியோ இவை போன்ற நிகழ்ச்சிகளைக் கூர்ந்து நோக்குகின்றான். நோக்கியவற்றை ஆழ்ந்த அறிவு கொண்டு ஆய்கின்றான். இங்ஙனம் பெற்ற ஆராய்ச்சி அறிவைப் புதுமைகள் காணப் பயன் படுத்துகின்றான்.

தண்ணீர் நிரப்பிய பெருந் தொட்டியில் ஒரு விஞ்ஞானி குளித்தார். குளிக்கும் நிலையில் அவருக்கு ஓர் உண்மை தென்பட்டது. அவர் தான் 'நிற்க வேறு இடம் அளிப்பின் இவ்வுலகையே ஆட்டிக் காட்டுவேன்' என முழங்கிய கிரேக்க விஞ்ஞானி ஆர்க்கிமிடீஸ். அவர் அப்போது கண்ட உண்மைதான் நாம் இப்போது கூறும் பொருட் செறிவுத் தத்துவம் (Specific Gravity) அவர் பிறந்த ஆண்டு கி. மு. 257. அவரது இடம் சிசிலித் தீவைச் சார்ந்த சிராக்கூஸ். அவரது தந்தை ஒரு கிரேக்க வானறிஞர். அலெக்சாண்டிரியாவில் அன்று புகழ் பெற்று விளங்கிய கணிதப் பள்ளியில் ஆர்க்கிமிடீஸ் பயின்றார். கணித ஆராய்ச்சியில் வாழ் நாள் முழுவதும் ஈடுபட்டிருந்தார். அவர் வாழ்ந்த காலத்தில் கிரேக்கர்கள் உடல் உழைப்பை இழிவாய்க் கருதினர். கருவிகள் மூலம் சோதனை செய்து விஞ்ஞான உண்மைகளைத் தெளிவு படுத்தலை கிரேக்கர்கள் அன்று விரும்பவில்லை. ஆயினும் ஆர்க்கிமிடிஸ் தான் கண்ட உண்மைகளை வெளியிடு முன் கருவி கொண்டு அவற்றிற்கு விளக்கம் பெற்றார் என நம்ப இடமுண்டு: ஆனால் கருவிகளின் மூலம் எப்படித் தெளிவு பெற்றார் என்பதை மட்டும் அவர் விளக்கவில்லை. அவர் தான் கண்ட அறிமுறை உண்மைகளைப் பல வழிகளில் பயனுறும்படி செயற்படுத்தியும் காட்டினார்.

ஐரோ (Hiero) என்னும் கிரேக்க மன்னன் தனக்கு ஒரு பொன் முடி செய்ய பொற்கொல்லன் ஒருவனிடம் வேண்டிய அளவு தங்கத்தைக் கொடுத்தான். பொற்கொல்லனும் பொன்முடி செய்து மன்னனிடம் தந்தான். பொன்முடி நிறுக்கப்பட்ட போது கொடுத்த தங்கத்தின் எடையளவு ஒப்ப இருந்தது. இருந்தாலும் பொற்கொல்லன் பொருள் விரும்பிப் பொன்முடியில் வெள்ளிக் கலப்புச் செய்திருக்கக் கூடுமென மன்னன் ஐயுற்றான் பொன் முடி தூய தங்கத்தாலயே செய்யப்பட்டதா என்பதை அறிய மன்னன் வழிதேடினான். வெவ்வேறு உலோகப் பொருள்கள் வெவ்வேறு எடையுள்ளன என்பது அன்று தெரிந்த உண்மைதான். ஒரு தங்கக் கட்டி அதே அளவுள்ள வெள்ளிக் கட்டியை விட மேலான எடை கொண்டது இவ்வுண்மையைப் பயன் படுத்திப் பொன்முடியைச் சோதிக்க முடியும். ஆனால் இவ் வழியைப்பின் பற்றினால் பொன் முடியே சிதைவுறும். ஏனெனில் முதலில் அப் பொன் முடியை உருக்கி ஒரு சதுரக் கட்டியாய்ச் சமைக்க வேண்டும் பின்னர் அதை அளவுள்ள தூய தங்கக் கட்டியோடு ஒப்பிட வேண்டும் இத் தூய தங்கக் கட்டியின் எடைய விட அது குறைந்து காணப்பட்டால் வெள்ளிக் கலப்பு வெளியாகும். பொன் முடியையே அழித்துப் பின்னர் சோதிப்பது பயனுடைத் தன்று எனவே உருவம் சிதையாமல் கொடுத்த தங்கத்தாலேயே அப் பொன் முடி செய்யப்பட்டதா என்பதைக் கண்டு பிடிக்க வேண்டும் இப் பொறுப்பை மன்னன் ஆர்க்கிமிடிஸினிடம் ஒப்படைத்தான்.

இம் முயற்சியில் ஈடு பட்டிருக்கும் போது தான் ஆர்க்கிமிடிஸ் பொருட் செறிவுத் தத்துவத்தைக் கண்டதாகக் கூறப்படுகிறது. ஆர்க்கிமிடிஸ் குளிக்கத் தண்ணீர்த் தொட்டிக்குள் இறங்கினார். தண்ணீர் மட்டம் சற்று உயர்ந்ததைக் கண்ணுற்றார். தொட்டிக்குள் உடல் மேன் மேலும் முழுகுங்கால் நீர் மட்டம் உயர்ந்து கொண்டே வந்தது. இவ்வாறு வருதல் இயற்கைதான். இன்று இதை நாமே செய்து கண் கூடாகப் பார்க்கலாம். இதில் எந்தப் புதுமையும் நாம் காணவில்லை. ஆனால் ஆர்க்கிமிடிஸ் இதிலிருந்துதான் ஒழுங்கற்ற உருவங்களின் கன அளவை (irregular volume) காணும் முறையைக் கண்டு பிடித்தார். பொன் முடியைச் சோதிக்க இம்முறையைக் கையாண்டார். ஒரு பாத்திரம் நிறையத் தண்ணீர் ஊற்றினார். பொன் முடியை இத் தண்ணீரில் முழுதும் மூழ்கும்படி டக்குவமாகத் தொங்கவிட்டார். வழிந்து வரும் தண்ணீரை அளந்தார். இத் தண்ணீரின் கன அளவும் பொன் முடியின் கன அளவும் ஒன்றுதான் என்பது தெற்றென விளங்குகின்றதன்றோ! இப்போது எளிதில் பொன் முடியைச் சோதிக்கலாம். வழிந்து வந்த தண்ணீரின் கன அளவுள்ள தூய தங்கம் எடை போடப்பட்டது இவ் வெடையும் பொன் முடி எடையும் ஒன்றாய் அமைய வேண்டுமன்றோ! ஆனால் அவை ஒன்றாய் அமையவில்லை இவ்வாறு திருட்டு வெளிப்பட்டுப் பொற் கொல்லன் தூக்கிலிடப் பட்டான். பொறியியலாளர் களும் விஞ்ஞானிகளும் ஒரு பொருளை அதே கன அளவுள்ள தண்ணீரோடு ஒப்பிட மேற்கண்ட முறையைக் கையாண்டனர். ஒரு பொருளின் எடைக்கும் அதே கன அளவுள்ள தண்ணீரின் எடைக்கும உள்ள விகிதத்தை (radio) செறிவு எண (Relative Density) என வழங்குகின்றனர். ஏறத்தாழத் தங்கத்தின் செறிவு எண் 20; வெள்ளியின் செறிவு எண் 10. அதாவது,

$$\frac{\text{ஒரு கன சென்டி மீட்டர் தங்கத்தின் எடை}}{\text{ஒரு கன சென்டி மீட்டர் தண்ணீரின் எடை}} = 20;$$

$$\frac{\text{ஒரு கன சென்டி மீட்டர் வெள்ளியின் எடை}}{\text{ஒரு கன சென்டி மீட்டர் தண்ணீரின் எடை}} = 10.$$

[ஒரு கன சென்டி மீட்டர் தண்ணீரின் எடை 1 கிராம் ஆகும்]

மேற்கூறிய முறையை ஒட்டியே மிதக்கும் தத்துவமும் (Buoyancy) அமைந்துள்ளது. நாம் கிணற்றில் இறங்கி மூழ்கிக் குளிக்கும் போது சிறிது மேல் நோக்கித் தள்ளப் படுவதைக் காணலாம் மேலும் தண்ணீருள் எளிதாக நீந்திச் செல்லுகின்றோம். மற்றும் மரக்கட்டை தண்ணீருள் முழுவதும் அமிழாமல் மிதப்பதைக் காண்கின்றோம். இவை பற்றி நாம் சிறிதும் சிந்திப்பதில்லை. ஆனால் ஆர்க்கிமிடிஸ் இவற்றை ஆராய்ந்துதான் படகு. கப்பல் முதலானவை மிதந்து செல்லும் அடிப்படைத் தத்துவத்தைக் கண்டுபிடித்தார். ஒரு பொருள் தண்ணீருள் அமிழும் போது ஓரளவு தண்ணீரை விலக்கிச் செல்கிறது. பொருள் முழுவதும் அமிழுங்கால். அதன் கன அளவு எவ்வளவோ அவ்வளவு தண்ணீர் விலக்கம் உறுகிறது தண்ணீருள் ஆழ்ந்துள்ள போது பொருளின் எடை ஓரளவு குறைவாக இருக்கும்.

(தொடரும்)

"செந்தமிழில் இசைப்பாடல்
இல்லையெனச் செப்புகின்றீர்
மான மின்றிப்

பைந்தமிழில் இசையின்றேல்
பாழுங்கிணற்றில் வீழ்ந்துயிரை
மாய்த்தலன்றி"

(15—4—64 இதழின் தொடர்ச்சி)

மொழித்திற முட்டறுத்தல்

— பெரும்புலவர் ந. மு. கோவிந்தராய நாட்டார்

சிறந்த மொழிகள்

மேற்கூறிய இருவகை மொழிப் பாகுபாட்டினையும் உளத்திற்கொண்டு ஒருசேர ஆய்வோமாயின் ஒருண்மை புலனாகின்றது. முதற் பாகுபாட்டில் உள்ள 1. இந்திய ஐரோப்பிய மொழிகள். 2 செமிட்டிக்கம் என்ற இனத்தைச்சேர்ந்த மொழிகள் இவையிரண்டும் இரண்டாம் பாகுபாட்டில் உள்ள உட் பிணைப்பு மொழிகளாயுள்ளன இவற்றிலேயே சிறந்த மொழிகள் நூற்றுக்கு ஐம்பது விழுக்காடு காணப்படுகின்றன. வேர்ச்சொற்கள் இன்னதென அறியமுடியாதவாறு சொற்கள் மாறுபாடடைதல் இம்மொழிகளிற்பல உலகவழக்கறுவதற்கு ஒருகாரணமாயிருக்கலாம். ஒருகாலத்தில் மக்களால் பேசப்பட்ட மொழிகளாயிருந்தவை பின்னர் பேசப்படாமல் மறைந்தொழிதலே மொழிகளின் சிறப்பாகும். மூலமொழிகள் இவ்வாறு மறைந்தாலும் அவற்றிலிருந்து வேறு மொழிகள் தோன்றுவதால் அவை வேறு பிறப்பெடுக்கின்றன. வென்றே கூறவேண்டும். மூலமொழிகள் எழுத்துருவம் பெற்ற மொழிகளாயிருந்தால் அவற்றிலுள்ள இலக்கியங்கள் மறையா. சமசுகிருதம், கிரேக்கம், இலத்தீன், பழைய ஆங்கிலம், இடைக்கால ஆங்கிலம் இவற்றின் இலக்கியங்கள் இன்றும் உள்ளன. இக்கால ஆங்கிலேயர் தம் பழைய இலக்கியங்களைக் கற்கவேண்டுமானால் தம்பழைய மொழிகளைக்கற்றாகவேண்டும்.

தமிழின் இளமைத்திறம்

எத்தனையோ மொழிகளுக்குத் தாய்மொழிகளாய் நின்ற சமசுகிருதம் கிரேக்கம். இலத்தீன் ஆகியவை பேச்சு வழக்கற்றுப்போக இவற்றிலும் பழமையானதென ஆராய்ச்சியால பெறப்படும் தமிழ் இன்றும் பேசப்படும் மொழியாய் நிற்பதேன்? 'மனோன்மணியம்' ஆசிரியர், தமிழ்ப்பேரறிஞர். காலஞ்சென்ற சுந்தரம்பிள்ளை அவர்கள் தமிழ் வாழ்த்தாகப்பாடியுள்ள செய்யுட்கள் ஒன்றில், "பல்லுயிர்களையும், உலகங்களையும் படைத்துக் காத்து அழிக்கின்ற இறைவன் என்றும் அழியானாய் நிற்பதுபோல், கன்னடம், தெலுங்கு, மலையாளம், துளு முதலிய மொழிகளைப் பெற்றும் உலக வழக்கழிந்த ஆரியம்போல் சிதையாமல் நிற்கின்ற தமிழே நின்னுடைய கட்டிளமைத்திறத்தை நினைந்து வியந்து, செயலற்றுக் கருத்தொருப்பட்டு வாழ்த்துவம்" எனக் கூறியுள்ளது உயர்வு நவிற்சியன்று, வெற்றுரையன்று ஆதலின் இன்றும் குன்றா இளமையதாய் நிற்பதற்கேதுவான தமிழின் சிறப்பியல்புகள் யாவை?

இவ்வாராய்ச்சியில் இதுவரை யாரும் ஈடுபடவில்லை மேனாட்டறிஞர் மேற் குறைகூறுவதற்கில்லை ஏனெனில் இன்றும் அவர்கள் தமிழ்மொழியின் தொன்மையினையும் பெருமையினையும் உணர்ந்தவர்களாகத் தோன்றவில்லை. தமிழ் ஒருசிறந்த மொழி என்ற அளவிலேயே அவர்கள் நிற்கின்றனர். தமிழறிஞரும் மேனாட்டறிஞர் சுவடுபற்றியே செல்வதால் இத்துறையில் அவர்கள் செல்லவில்லை நம் அறிஞர்களிற் சிலர், ஒலியியலையும், சொற்பிறப்பியலையும் ஆராய்வதாற் பயனில்லை; சொற்றொடரியலை ஆராய்ந்தாற்றான் மக்கள் கருத்து வளர்ந்த வரலாற்றை யறியலாம் என்றகருத் துடையவராயிருக்கின்றனர் உண்மையே, எனினும், மொழிகள் எழுதப்படும் நிலைக்கு வந்த பிறகு நமக்குக் கிடைக்கும் சான்றுகள் உரைநடைகளல்ல, செய்யுட்களே. செய்யுட்களிலிருந்து பேச்சுநடை சொற்றொடரமைப்பை அறிவது அரிது ஆதலின் இக்காலப் பேச்சுநடையின் சொற்றொடரமைப்பைக்கொண்டு பண்டைய மக்கள் கருத்து வளர்ந்த வரலாற்றை அறிதற்கு வழியில்லை. இது எல்லா மொழிகளுக்கும் பொருந்தும் மொழிகள் உலகவழக்கறுவதற்குக் காரணங்கள் பல உண்டு:

1, ஒரு மொழி எழுதப்படும் நிலைக்கு வராமல் பேச்சு மொழி நிலையில் இருந்தகாலை அம்மொழியைப் பேசும் மக்கள் பல்வேறு நாடுகளுக்குச் சென்று வாழ்வதாலும் அங்கங்கே ஏற்படும் புதுக் கூட்டுறவுகளாலும் மொழி மாற்றமடைகின்றது. சென்றவிடத்து மொழி சென்றோர் மொழியை மாறச் செய்தலும் நிகழக்கூடியவையே.

2, எழுதப்படும் நிலைக்குவந்த மொழியில் இலக்கியங்கள் ஏற்பட்ட பிறகு அம்மொழியையும் இலக்கியங்களையும் வரையறைப்படுத்திக் காப்பாற்ற ஒழுங்கான இலக்கணங்கள் ஏற்படாத குறையினால் அம்மொழி நாளடைவில் மாறும் இயல்பை அடைகின்றது.

3. ஒரு மொழியின் அடிப்படையான எழுத்துக்களை ஒலியின்படி முறைப்படுத்தி அவற்றிற்கு வேண்டிய உருவங்களை அமைக்காமையாலும், அவற்றின் தொகையை அறுதியிடாமையாலும் எழுத்துக்களின் ஒலிகள் காலப்போக்கில் பல்வேறு மாறுதல்களுக்குள்ளாகின்றன. அதனால் மொழியும் மாறுகின்றது.

4. பேச்சொலிகளின் இயற்கை விதிகளைப் பின்பற்றாது, அவற்றிற்கு மாறான ஒலிகளை வலிந்து புகுத்துவதாலும், பிறமொழிச்சொற்களை வரையறையின்றிப் புகுத்தி மொழியை வளப்படுத்த முயலுவதாலும் மொழி மாறுகின்றது.

5, பேச்சுமொழிக்கும் இலக்கியமொழிக்கும் உள்ள வேறுபாடு பெரிதாகாதவாறு தடை செய்யாமையால் மொழி மாறுகின்றது.

தமிழின் இளமைக் காரணம்

மேற்கூறிய காரணங்களை விரிவாக விளக்குவதற்கு இக்கட்டுரை இடந்தராமையின் இன்றியமையாதனவெனயாம் கருதும் மொழியின் ஒலியியல்பு இரண்டை விளக்கி இக்கட்டுரையை முடிப்பாம். தமிழ் மொழியில் மிகமிகப் பழங்காலத்தில் ஒலியெழுத்துக்கள் உண்டாயின. அவற்றிற்குஉருவங்கள்பின்னர் அமைக்கப்பட்டன, தமிழ்மொழியிற்றான் ஒலியெழுத்துக்களுக்கு முதன்முதல் உருவங்கள் அமைக்கப்பட்டன என்று கொள்வதற்குச் சான்றுகள் பல உள்ளன. அவற்றை ஈண்டு விரித்தல் வேண்டாம் உருவங்கள் ஏற்பட்ட பிறகு தமிழ் இலக்கியங்கள் எழுதப்படும் நிலைக்கு வந்தன. இவ்விலக்கியங்களை முறைப்படுத்தி அளவைக் கட்டுப்படுத்த அகத்தியம், தொல்காப்பியம் ஆகிய பேரிலக்கணங்கள் பின்னர்த் தோன்றின. 'மொழி முதற் காரணமாம் அணுத்திரள் ஒலி எழுத்து' என்பது வியக்கத் தக்க எழுத்திலக்கணமாகும். 'பவணந்தி என்னும் பல்கலைக் குரிசில்' கூறிய ஒலியெழுத்திலக்கணம் இது இவர்க்கு ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் ஆசிரியர் தொல்காப்பியனார், தமிழ் எழுத்து முப்பத்து மூன்றென வரையறைப்படுத்தி, அவை பிறக்கு மாற்றையும். அவற்றின் ஒலிகள் உலக மொழிகளின் எழுத்தொலிகளுக்குப் பொதுவாய் நிற்கும் தன்மையினையும் முதல் இரண்டு இயல்களில் பொதுவாகவும், பிறப்பியலில் சிறப்பாகவும் நுண்மாண் நுழைபுலங் கொண்டு விளக்கியுள்ளார். இவற்றின் விரிவை எமது 'உலகப் பொது தமிழ் எழுத்தொலி' என்ற நூலிற் காண்க.

தமிழ் மொழியில் உள்ள உயிர் பன்னிரண்டும், மெய் பதினெட்டும் பேச்சுக் கருவிகளின் எளிய இயற்கையான முயற்சியால் உண்டாகும் அடிப்படை எழுத்துக்களாம். இவற்றிற்கு மாறுபட்ட ஒலிகளையுடைய ஆங்கில, ஐரோப்பிய உயிரெழுத்தொலிகளும், சமசுகிருதத்தின் மெய்யெழுத்து வருக்கங்கள் போன்றவையும், அரபி மொழியின் மிடற்றொலி எழுத்துக்களும். பேச்சுக் கருவிகளின் கடு முயற்சியால் உண்டாகும் கலப் பொலி எழுத்துக்களாம். கலப்பொலி எழுத்துக்களை உண்டு பண்ணுவதற்கு வேண்டிய முயற்சியும் மூச்சும் அடிப்படை எழுத்துக்களை உண்டு பண்ணுவதற்கு வேண்டிய முயற்சி, மூச்சு இவற்றைவிட அதிகமாகும். ஆகலின் முயற்சிச் செட்டு, (Economy of Effort) எழுத்துச் சுருக்கம் (Syncope) ஆகிய ஒலியிலக்கண விதிகள் இம் மொழிகளை விரைவில் மாறுபாட்டுக்குள்ளாக்கும்.

[தொடரும்]

(15—4—64 இதழின் தொடர்ச்சி)

தொல்காப்பிய விளக்கம்

— பேராசிரியர் சி. இலக்குவனார்

36. நெட்டெழுத்து இம்பரும் தொடர்மொழி ஈற்றும்
குற்றியலுகரம் வல்லாறு ஊர்ந்தே.

நெட்டெழுத்து இம்பரும்=நெட்டெழுத்தினது பின்னும், தொடர்மொழி ஈற்றும்=இரண்டு எழுத்துக்களுக்குமேற்பட்ட எழுத்துக்களால் ஆன சொல்லின் இறுதியிலும், குற்றியலுகரம்=குறைந்த ஒலியையுடைய உகரம் (ஒரு மாத்திரையில் குறைந்து அரை மாத்திரையாக ஒலிக்கும்உகரம்), வல்ஆறு ஊர்ந்து=வல்லினமெய்களாம் க், ச், ட், த், ப், ற் என்பனவற்றின்மீது பொருந்தி வரும்.

குற்றியலுகரம் மொழியிறுதியில் நிற்கும் வல்லின மெய்களைப் பொருந்திவரும். இரண்டு எழுத்துக்கள் உள்ள மொழியாய் இருந்தால் முதல் எழுத்து நெடிலாகவே இருக்கும். இரண்டு எழுத்துக்களுக்கு மேற்பட்ட எழுத்துக்களால் ஆன சொல் தொடர்மொழி என்று அழைக்கப்பட்டுள்ளது.

காட்டு:
காடு: நெட்டெழுத்தின் பின் குற்றியலுகரம்

விறகு: தொடர்மொழியில் குற்றியலுகரம்

(விரிவு குற்றியலுகரப் புணரியலில் காணலாம்)

37. இடைப்படிற் குறுகும் இடனுமாருண்டே
கடப்பாடறிந்த புணரியலான.

இடைப்படின்=(மொழியிறுதியில் வல்லினமெய்யின்மீது ஏறிவரும்உகரம்) இருசொற்களின் நடுவே பொருந்தின், குறுகும் இடனுமாருண்டு=குறுகும் இடனும் உண்டு(ஆர்: அசை) 'தெற்குக்கடல்'என்று கூறும்போது 'தெற்கு' என்பதின் ஈற்றில்வந்துள்ள உகரம் குறுகிய ஓசையுடையதோ, குறுகாத ஓசையுடையதோ என ஐயம் தோன்றும். ஓசை குறைந்துவருவதும் வராததும் சொல்லுவார் தன்மையைச் சார்ந்துள்ளது. ஆதலின் 'குறுகும் இடனும் உண்டு' என்றார். 'குறுகாத இடனும் உண்டு' என்பதும் அறிவிக்கப்பட்டுள்ளது.

38. குறியதன் முன்னர் ஆய்தப் புள்ளி
உயிரொடு புணர்ந்த வல்லாறன் மிசைத்தே.

ஆய்தப்புள்ளி=புள்ளிவடிவமாக எழுதப்படும் ஆய்தம் எனும் எழுத்து, குறியதன்முன்னர்=குற்றெழுத்தின் பின்னர், உயிரொடு புணர்ந்த=உயிர் எழுத்தோடு பொருந்திய, வல்லாறன்=வல்லெழுத்துக்கள் ஆறின், மிசைத்து=மேலது.

ஆய்தம், குறிலின் பின்னும், வல்லின உயிர்மெய்யின் முன்னும் வரும்.

காட்டு. எஃகு; கஃசு

'ஆய்தம்', 'மெய்' என்று அறியத் தகும் முறையும் வகையில் இங்குப் புள்ளி என்று சுட்டப்பட்டுள்ளது என்பர் உரையாசிரியர் இளம்பூரணர்.

39. ஈறியல் மருங்கினும் இசைமை தோன்றும்.

ஈறு இயல் மருங்கினும்=நிலைமொழி இறுதி வருமொழி முதலோடு சேர்ந்து ஒலிக்குமிடத்திலும் இசைமை=ஆய்தஒலி, தோன்றும்=உண்டாகும்.

காட்டு: கல் + தீது = கஃறீது
முள் + தீது = முஃடீது

40. உருவினும் இசையினும் அருகித் தோன்றும்
மொழிக்குறிப்பு எல்லாம் எழுத்தின் இயலா
ஆய்தம் அஃகாக்காலையான.

உருவினும்-வடிவத்தைச் சுட்டுமிடத்தும், இசையினும்-ஓசையைச் சுட்டுமிடத்தும், அருகித்தோன்றும்-சிறுபான்மையாய் வரும், மொழிக் குறிப்புஎல்லாம்-குறிப்புமொழிகள் எல்லாம், எழுத்தான இயலா-ஆய்த எழுத்தானிட்டு எழுதப்பட்டு எழுத்துக்கள் போன்று நடவா; ஆய்தம்-அவ்வாய்த எழுத்து. அஃகாக்காலையான-தன் அரைமாத்திரையில் குறைந்துஒலிக்காது மிகுந்து ஒலிக்குமிடத்து.

'கஃறு'என்பது வடிவைச்சுட்டும் குறிப்புமொழி. 'சுஃறு'என்பதுஓசையைச் சுட்டும் குறிப்புமொழி. இவ்விரண்டு சொற்களையும் ஓசை நீட்டிச் சொல்ல வேண்டும். அவ்வாறுஆய்தஎழுத்தின்ஒலியைமிகுத்துச் சொன்னாலும், அவ்வொலி மிகுதியைக்குறிப்பதற்கு ஆய்த எழுத்தை மிகுத்து எழுதுவது இன்று.

"ஆய்த எழுத்து தனக்குள்ள அரைமாத்திரையினும் மிகுந்து ஒலிக்குமிடம் குறிப்பு மொழிகளில் சிறுபான்மை தோன்றும். அவ்வாறு தோன்றுவதை எழுத்தான் எழுதிக் காட்டுவது இன்று" என்பது இந்நூற்பாவால் அறிவிக்கப்பட்டது.

41. குன்றிசை மொழிவயின் நின்றிசை நிறைக்கும்
நெட்டெழுத்து இம்பர் ஒத்த குற்றெழுத்தே.

குன்று இசைமொழிவயின்—போதிய ஒலியில்லாது குறைந்து ஒலிக்கும் சொல்லினிடத்து, நெட்டெழுத்து இம்பர் — நெடிலெழுத்துக்களின் பின்னர், ஒத்த குற்றெழுத்து—நெட்டெழுத்துக்கு இனமான குற்றெழுத்துக்கள், நின்று இசை நிறைக்கும்—தோன்றி குறைந்துள்ள ஒலியை நிறைவுசெய்யும்.

காட்டு: மாஅல்; 'மால்' எனும்போது 'மா' வுக்குரிய இரண்டு மாத்திரை ஒலிபோதவில்லை. 'ஆ' வினுவுக்கு இனமான 'அ' தோன்றி அதன் இரண்டு மாத்திரை ஓசையை மூன்று மாத்திரையாக்கியுள்ளது

(தொடரும்)

வள்ளுவர் குலவினம்

பேராசிரியர் ஞா. தேவநேயப்பாவாணர் எம்.ஏ., பி.ஓ.எல்.

இவ்வுலகத்தினர் எல்லாரும் இருமைப் பயனும் எய்தி இன்புறுமாறு, எக்காலத்திற்கும் எந்நாட்டிற்கும் ஏற்றவாறு, வாழ்க்கைக்கு வழி வகுத்து அதில் நடந்தும் காட்டிய வள்ளுவர் தமிழ்ப் புலவருள் தலையாயார் என்பது எல்லார்க்கும் ஒப்ப முடிந்த முடிவாம்.

இத்தகைய தலைமை சான்ற வள்ளுவரை, வேண்டுமென்றே ஆரிய வழியினராகக் காட்ட வேண்டிப் பிராமணத் தந்தைக்குப் பிறந்தவராகக் கூறுவது ஒரு சார் புறத் தமிழர் மரபு. இனி, இதற்கு எதிராக அவரை உயர்த்திக் காட்டுதற் பொருட்டு உண்மைக்கு மாறாய் உயர்வாகக் கருதப் பெறுகின்ற ஒரு குலத்தினராகக் கூறுவது, ஒருசார் அகத்தமிழர் மரபு. பிறப்பால் சிறப்பில்லை யென்றும் ஒழுக்கத்தால்தான் உயர்வு என்றும் கூறிய வள்ளுவரை, அவர் கொள்கைக்கு மாறாகப் பிறப்பால் இழிந்தவராகக் கருதுவது எத்துணைப் பேதைமை!

திருவள்ளுவர் தம் முதற் குறளில் ஆண்டுள்ள 'ஆதி பகவன்' என்னும் தொடரை, துரும்பைத் தூணாக்குவது போலும் பேனைப் பெருமாளாக்குவது போலும் மிகப் பெரிதாக்கி, அது அவரின் பெற்றோர் பெயரைக் குறிப்பதாகக் கொண்டு மயங்கி இடர்ப்படுகின்றனர் பல்வேறு சாரார். பகவன் என்பது பகுத்தளிப்பவன் அல்லது படியளப்பவன் என்று பொருள் படும் தென் சொல். பகவு, முதனிலை; அன் ஈறு. பகு + உ = அல்லது அவ் = பகவு. எல்லாவுயிர்க்கும் படியளித்துக் காப்பவன் இறைவன். Lord என்னும் ஆங்கிலச் சொற்கும் இதுவே பொருள் Hlaford = Loaf Ward = Bread keeper. பகவன் என்னும் சொல் நாளடைவில் முனிவரையும் குறித்துப் பொருளிழிந்து விட்டதனால், முழு முதற் கடவுளைக் குறிக்க 'ஆதி' என்னும் அடை வேண்டியதாயிற்று. 'ஆதி' வட சொல்லே. அது போன்று வேறொரு சில வட சொற்களும் திருக்குறளில் உள. அதனால் அந்நூற்கு இழுக்கில்லை. ஒரு மர நாற்காலியில் இரண்டோர் இருப்பாணியிருப்பதால் அது இருப்பு நாற்காலியாகி விடாது. அது போல் ஒரு சில வட சொலுண்மையால் திருக்குறளும் தன் தமிழ்மையை இழந்துவிடாது. ஆதி பகவன் என்பது முதற் கடவுளைக் குறிக்கும் தொடராயின், இடையில் வலிமிகல் வேண்டுமே என்று சிலர் வினவலாம். மூவகைப் புணர்ச்சித் திரிபுகளுள் ஒன்றுன தோன்றல், பண்டை நாளில் ஏனையிரண்டு போல அத்துணைக் கட்டாயமாக விருந்ததாகத் தெரியவில்லை. இன்றும் இருவகை வழக்கிலும் வலி மிக வேண்டுமிடத்து மிகாமல் வழங்கும் சில தூய தமிழ்த் தொடர்களும் உள.

எடுத்துக்காட்டு: காய்காலம்
கோவூர் கிழார்
பேறுகாலம்
நாடுகிழவோன்

இவற்றுட் பின்னிரண்டும் இலக்கணப்படி நிலைமொழி யீற்று வலி யிரட்டித்து வலி மிக வேண்டும்.

இனி. அகர முதல எழுத்தெல்லாம் ஆதிப்
பகவன் முதற்றே யுலகு.

என்று பாடமோதின், எவ்வகை இடர்ப்பாடுமில்லை. உவமை நிரம்புவதுடன் சொல்லும் தூய்மைப்படும்.

ஆதி பகவன் என்பது திருவள்ளுவரின் பெற்றோரைக் குறிக்கும் தொடரென்று கொண்டாருள் முதல்வரான ஞானாமிர்த நூலார், வள்ளுவரை யாளிதத்த முனிவர்க்கு ஆதி என்னும் புலைச்சியிடம் பிறந்தவராகக் கூறுகின்றார். அவர் கருத்துப்படி, பகவன் என்பது முனிவரைக் குறிக்கும் பொதுப் பெயர். யாளிதத்தன் என்னும் இயற்பெயர் முற்றும் புதுப் படைப்பு, ஞானாமிர்த ஆசிரியர் காலம் இன்றைக்கு எழுநூறாண்டிற்கு முன் என்பர்.

கி. பி 18-ஆம் நூற்றாண்டு போல் இயற்றப்பட்டதாகத் தெரிகின்ற கபிலர் அகவல் என்னும் சிறு சுவடி, ஒரு வள்ளுவர் பிறப்பைப் பற்றிப் பின் வருமாறு வரைகின்றது.

''பகவன் என்னும் பிராமணனுக்கும் ஆதி என்னும் கருவூர்ப்புலைச்சிக்கும் புதல்வர் மூவரும் புதல்வியர் நால்வருமாக எழுவர் மக்கள் பிறந்தனர். அவருள், உப்பை ஊற்றுக் காட்டு வண்ணார் வீட்டிலும், உறுவை காவிரிப் பூம்பட்டணத்துக் கள்விலைஞர் வீட்டிலும் வள்ளுவர் மயிலைப் பறையர் வீட்டிலும், வள்ளி குறவர் வீட்டிலும், அதிகமான் வஞ்சி அதிகன் வீட்டிலும், கபிலர் ஆரூர்ப் பிராமணர் வீட்டிலும், ஔவை பாணர் வீட்டிலும் வளர்ந்தனர்.''

இவ்வரையில், வரலாற்றுத் தொடர்புள்ள கடைக்கழகக் காலப் புலவர் புலத்தியர் பேரும், ஒரு மன்னன் பெயரும், வரலாற்றுத் தொடர்பற்ற சில புனைபெயரும், குமரிக் கண்டத்துக் குறிஞ்சிப் பெண் தெய்வத்தின் பெயரும், கடுகளவும் பொருத்த மின்றிக் கலந்துள்ளன.

இதுவன்றி:

''மேல்வகை கீழ்வகை விளங்குவ தொழுக்கால்
ஒருவகைச் சாதியாம் மக்கட் பிறப்பு.''

''பூசுரர்ப் புணர்ந்து புலைச்சியீன்ற
பூசுர ராயினோர் பூசுர ரல்லரோ''

''சேற்றிற் பிறந்த செங்கழு நீர்ப்போல்''

என்று முன்பின் முரண்பட்ட பொருட் டொடர்களும் இக் கபிலர் அகவலில் உள. இதனால், இவ்வகவல் ஆராய்ச்சிக் குதவும் சான்றாகாது.

இனி, திருவள்ளுவ வெண்பா மாலையில், நல்கூர் வேள்வியார் செய்யுளாக வந்துள்ள

''உப்பக்க நோக்கி உபகேசி தோண் மணந்தான்
உத்தர மாமதுரைக் கச்சென்ப-இப்பக்கம்
மாதாநு பங்கி மறுவில் புலச் செந்நாப்
போதார் புனற் கூடற் கச்சு''

என்னும் வெண்பாவைத் துணைக் கொண்டு, பண்டித கோவிந்தராச தாசர், (வள்ளுவர் குலத்தைச் சேர்ந்த) கச்சன் என்னும் தந்தையார்க்கும் உபகேசி என்னும் தாயார்க்கும் திருவள்ளுவர் பிறந்ததாகக் கூறினர் இது வலிந்தும் நலிந்தும் கொண்ட பொருளாதலால், இதுவும் ஆராய்ச்சிக்குரியதன்று.

இனி நாவலர் சோமசுந்தர பாரதியார்,

''வள்ளுவன் சாக்கை யெனும் பெயர் மன்னர்க்
குள்படு கருமத் தலைவர்க் கொன்றும்.''

என்னும் பிங்கல நூற்பாவிலுள்ள 'உள்படு கருமத் தலைவர் என்னும் தொடர்க்கு மாளிகை நாயகம் (Chamberlain) என்று பொருள் கொண்டு வள்ளுவரை ஒரு பாண்டிய வேந்தனின் மாளிகை நாயகமாயிருந்த உயர்குல வேளாளராகக் கொண்டார். உள்படு கருமத் தலைவர் என்பது அரசனொடு நெருங்கிய தொடர்புள்ள வினைத் தலைவர் என்று மட்டும் பொருள் படுமேயன்றி மாளிகை நாயகம் என்று பொருள்படாது. அரசனுக்கு அகப்பணி செய்வார் அனைவரும் அரசனுக்கென்றே ஒதுக்கப்பெற்றவராவர். எத்துணை வருமானம் வரினும் அவர் பிறர் பணியை மேற்கொள்ளார்; மேற்கொள்ளவும் முடியாது. அவ்வப்போது அரசனது மன நிலையை அறிந்து, அதற் கேற்றவாறு இன்பக் கூத்து நகைக் கூத்து மறக் கூத்து முதலியவற்றை அரசனுக்கும் அவனால் அழைக்கப்பெறும் உறவினர்க்கும் அதிகாரிகட்கும் நடித்துக்காட்டுபவன் சாக்கையன். அரசனுடைய கட்டளைகளை மட்டும் அன்றன்று யானைமேலேறிப் பறையறைந்து தலைநகரத்தார்க்கு அறிவிப்பவன் வள்ளுவன்.

சாக்கையன், வள்ளுவன் என்னும் இவ்விருவரும் அரசன் பணிகளையே செய்பவராதலின் உள்படு கருமத் தலைவர் எனப்பெற்றார்.

[தொடரும்]

எல்லாம் அவளே!

(திருக்குறளார், விழுப்புரம்)

திருவள்ளுவனாரின் ஆழ்ந்த உண்மைகள் பன்முறையும் சிந்தித்துப் பார்ப்பவர்களுக்குத்தான் புலப்படும். மறைபொருளாகி இருக்கின்ற கருத்துக்கள் மேலெழுந்தவாரியாகப் பார்த்துவிட்டுப் போகின்றவர்களுக்குத் தோன்றா. சொல்லுக்குச் சொல் பளுவான பொருள்கள் பொதிந்து கிடக்கின்றன.

வாழ்க்கைத்துணைவியாக இருக்கும் மனைவியைப்பற்றி நாம் பொதுவாக சில எண்ணங்களை வைத்திருக்கின்றோம். வாழ்க்கையில் இன்பம் அளிப்பவள் - நமக்குத் தேவையானவள்— குழந்தையின்பம் தருபவள்—நம்மைப்பாதுகாப்பவள்-என்றவாறு ஒருவகையில் நினைத்துக்கொண்டுவருகின்றோம்; சிறிது சிந்தித்துப் பார்ப்போமேயானால் மனைவியின் பொறுப்பில் ஆசிரியர் வள்ளுவனார் விட்டிருக்கும் பண்புகள், செயல்கள், நடைமுறைகள் அனைத்தும் அதிநுட்பமானவைகள் என்பது திண்ணமாகிவிடும்.

மனத் திட்பம்-மனோ நிலை-மன உறுதி-கற்பு - என்று பேசப்படுகின்ற ஒன்று அவளுக்கிருக்க வேண்டிய மிகச்சிறந்த பண்பாடாகும். இதனை எவ்வாறெல்லாம் ஆசிரியர் வாயிலாக நாம் அறிகின்றோம் என்பதுதான் குறிப்பிடத்தக்கதாகும். அவளுடைய கற்பினை அவளேதான்காத்துக்கொள்ளவேண்டும்மற்றவர்களால்போற்றிப்பாதுகாக்கவே முடியாது! அவளுடைய உயிரை-உயிருக்கு நேரும் ஆபத்தினை அவளுடைய நாயகன் காப்பாற்றலாம். அல்லது தந்தையோ, பிள்ளையோ வேறு யாரும் காப்பாற்றிவிடலாம்; ஆனால் கற்பினைமட்டும் அவள் ஒருத்தியேதான் காப்பாற்றிக் கொள்ளவேண்டும். "தற்காத்து" என்றொரு சொல் 'வாழ்க்கைத் துணை நலம்' என்று மனைவியைப் பற்றிப் பேசும் பகுதியில் வருகின்றது. அதனுள் அடங்கிக் கிடக்கும் கருத்துக்களை நன்கு விளக்கமாகப் புரிந்துகொள்ளவேண்டும்.

"பெண்ணின் கற்பினை" நான் காப்பாற்றுவேன்-அவள் வழுவாமல் பாதுகாத்துவிடுவேன்-என்று வேறு எந்த ஆண்மகனோ - மற்றவர்களோ நினைத்தால் அது தவறாகும் என்று சொல்லாவிட்டாலும்-நடக்காத காரியம் என்று மட்டும் அறிந்துகொள்ளவேண்டும். அதனைக் காப்பாற்ற முடிந்தவள் அவளேதான்! "சிறைகாக்கும் காப்பு எவன் செய்யும்" என்றொரு தொடர் மனைவியைப் பற்றிப் பேசும் இப் பகுதியிலேதான் கூறப்படுகின்றது. சிந்திக்கவேண்டிய இடம்.

அடைத்து வைத்து - அல்லது பூட்டிவைத்து—ஒரு பெண்ணின் கற்பினைக்காப்பாற்றிவிடலாம்என்று எண்ணுவது எவ்வளவு பேதைமை! அடைத்துவைப்பது என்ன செய்யும் என்று ஆசிரியர் கேட்டு வைக்கின்றார்; முதன்மையான-தலையான — மனைவியின் பண்பு கூறப்பட்டது.

அடுத்து அவளுக்குஇருக்கின்ற மிகச் சிறந்த பொறுப்பு, தன்னைக் கொண்ட கணவனைக் காத்தலாகும். நாயகனிடம் - இன்பமாக வாழ்தல்-அன்புடன் களித்திருத்தல்-என்கின்ற செய்திகளை ஒரு பக்கமாகவைத்துவிட்டு, அவனைப் பேணிக்காப்பாற்றவேண்டும்என்கின்ற அடிப்படைக் கருத்தினை ஆசிரியர் கூறிவைத்தார். "தற்கொண்டான் பேணி" என்ற சொற்கள் தாங்கி இருக்கும் உண்மைகள் மிகப்பல. பேணுதல்-காத்தல் என்றெல்லாம் நாம் பேசுகின்றோம்.

நாயகனுடையஉடம்பைக்காப்பாற்றுதல் அவளுடைய முதன்மையான கடமையாகும். நாயகன்உடல்நோய்வாய்ப்பட்டான் என்றால் அதற்கு முதற் காரணம் மனைவியே என்பதும் குறிப்பாகும். நாயகன் உண்ணுகின்ற உணவு—எண்ணுகின்றஎண்ணம்—பேசுகின்ற பேச்சு - போகின்ற போக்கு—குறிக்கின்றகுறிப்பு-ஆக இத்தனையையும் அவள் ஒன்றுவிடாமல் புரிந்துகொண்டு அவனைக் காப்பாற்றிப் பாதுகாக்க வேண்டும் என்பதை யெல்லாம் குறிந்துக் காட்டவே "தற்கொண்டான் பேணி" என்றார் ஆசிரியர்; கணவனுக்குச் சமைத்தலே போதும்—குழந்தைகளைப் பெற்றுக் காத்தலே போதும்—என்று எளிதாக வாழ்பவள் வள்ளுவர் காட்டும் வாழ்க்கைத் துணைவி ஆகமாட்டாள்! ஒவ்வொரு கனமும் கணவனின் மனதிற்குள் சென்று சென்று வரவேண்டும்!

மனைவி — வாழ்க்கைத்துணைவி—தன்னுடைய குடும்பத்தினை எவ்வாறு பாதுகாத்தல் வேண்டும் என்பது மற்றுமோர் நுட்பமான செய்தியாகும்; நாயகனுடைய வருவாயினை முழுக்க முழுக்க அவள் தெரிந்து கொள்ளுதல் வேண்டும்; இது முதலிலும் முதலான கடமை; தனக்கு வருகின்ற வருவாயினை நாயகன் நாயகிக்குத் தெரியாமல் வைத்திருக்கக் கூடாது! நாயகியின் அறியாமைக் குணத்தினால் நாயகிக்குத் தெரியாமல் நாயகன் வருவாயினை மறைக்கின்றான் என்பது அவ்வளவு ஏற்றுக்கொள்ளத்தக்கதன்று!

"வளத்தக்கான் வாழ்க்கைத் துணை" என்றொரு கருத்தினை வள்ளுவனார் தருகின்றார். கணவனின் வளத்திற்கு ஏற்றபடி இல்லாமல் இருப்பவள் எங்ஙனம் துணையாக இருத்தல்கூடும்? அதுவும் வாழ்க்கைத்துணையாக இருக்கமுடியும்? வாழ்க்கையினை நாமே நம் விருப்பப்படி அமைத்துக் கொண்டு வருவாயினை அதற்கேற்றபடி இருக்கநினைத்தல்அறிவற்ற செயலாகும், வருவாய்க்குத் தக்கபடி நடப்பாயாக என்று இருக்கின்றமுறையினைஉணர்தல்வேண்டும்.

இத்தகைய பண்பாடுகளை இளம் பருவத்திலிருந்தே பெண்கள் உள்ளத்தில்படியுமாறு செய்யும் நூல்களை அவர்களுக்குப் படிப்பித்தல்வேண்டும்; வீட்டிற்குப் புகழ்வருவது யாரால்? எவ்வாறு? அவளுக்குத் தேவையாது? நாயகனுடைய எவ்வளவு பெரிய புகழானாலும் எப்போது உடைபட்டுவிடும்?...என்று இவ்வாறான மிகமேலான அரிய அன்றாட நடைமுறைக்குவேண்டிய—இருக்கவேண்டிய — சுவையான-கருத்துக்களை யெல்லாம், "வாழ்க்கைத்துணை நலம்" என்ற பகுதியினை ஒவ்வொரு குறட்பாவாக நன்கு படித்துப் பார்த்தால்தான் தெளிவாக விளங்குவனவாகும்.

(15—3—64 இதழின் தொடர்ச்சி)

வள்ளுவரும் அரசியலும்

— டாக்டர் பா. நடராசன்,
எம்.ஏ., டி.லிட்., எம்.எல்.ஏ.

தெரிந்து வினையாடல்

தன்மாட்டு அன்பும் அறிவும் தனக்கென அவா வின்மையும், செய்யவேண்டும் வினையில் துணிவு முடையாரைத் தெரிந்து செயலில் ஈடுபடுத்தவேண்டும். அந்த வினைக்குத் தகுந்தவனை எவன் என்று கண்டு அவன்மாட்டு வினையின் ஒப்படைத்துவிட வேண்டும்.

சுற்றம் தழுவல்.

தனக்கு அதிகாரம் வந்துவிட்டதென்று இறுமாப்படைந்து பழமையை மறத்தலாகாது. பழைய நண்பர்களைச் சுற்றமாகத் தழுவுதல் வேண்டும். பொதுநோக்கால் பயனில்லை. வரிசையால் அவரவர்க்கேற்ற முறையில் ஆதரவு தருதல் வேண்டும். பிரிந்தவரைக் காரணம் கண்டு மீண்டும் தழுவிக் கொள்ளல்வேண்டும்.

பொச்சாவாமை :

சோர்தல் ஆகாது. உவகைமகிழ்ச்சியில்மூழ்கி விடலாகாது. யார்மாட்டும் இகழ்ச்சி ஆகாது. நீங்காது விழிப்போடு இருத்தல் வேண்டும்.

செங்கோன்மை; கொடுங்கோன்மை:

நடுவுநிலை நின்று எதையும் தேர்ந்து ஆட்சி நடத்துதல் வேண்டும். நல்லோரைப் பேணியும், தீயோரை ஒறுத்தும் ஆட்சி செய்யத் தயங்கலாது. கொடுங்கோலன் தன் வாழ்வையும் குடிகள் வாழ்வையும் அழித்துவிடுகின்றான். கடுஞ் சொல்லனுதல், காண்டற்கு அரியனுதல், கட்டற்ற கடுமையான தண்டனைகளை விதித்தல்-இவை அஞ்சத்தகுந்த கொடுங்கோலன் இயல்புகள். நீதியோடு கருணையும் கலந்து வழங்குதல் வேண்டும். கடிதோச்சி மெல்ல எறியவேண்டும்.

ஒற்றாடல்; மடியின்மை :

ஒற்றால் எவற்றையும் அறிந்துகொள்ளல் வேண்டும். அறிந்தவற்றால் உண்மை கண்டு, தளராது ஊராருடையவனுக இருத்தல்வேண்டும். உள்ளத்திலே ஊக்கமுடையனுதல்போல, கருத்திலே மடியில்லாதவனுயும் செயலிலே ஆள்வினை உடையவனுகியும் அமைதல் வேண்டும், எவ்வகைத் துன்பம் நேரினும் மலையாதிருத்தல் வேண்டும். இடும்பைக்கே இடும்பை செய்தல்வேண்டும்.

அரசங்கங்கள் :

இங்ஙனமாக அரசியல்தலைவன் கொள்ளவேண்டிய நற்பண்புகளையும் தள்ளவேண்டிய தீப்பண்புகளையும் விதைத்துவிட்டு மேலே அரசியல் உறுப்புக்களான அமைச்சு, நாடு, அரண், பொருள், படை நட்பு ஆகியவற்றின் திறன்களை விரித்துச் செல்கின்றார். பின்னே குடிகளுக்கு இன்றியமையா அருஞ்சிறப்புக்களை ஒழிபியலில் கூறிப் பொருட்பாலை முடிக்கின்றார்.

இதுகாறும் கூறியவற்றால் வள்ளுவர் அரசியல் பற்றிக் கண்ட திரண்ட சில உண்மைகள் தெளிவாகும்.

பொருளியலும் அரசியலும் :

1) மக்கள்இன்பம்பொருள்வளத்தில்நல்லாட்சியில் மலர்வது. அரசியல் அதற்கு ஒரு துணைக் கருவியேயாகும்.

இதனால்தான் அரசியல்பற்றி விரித்துக் கூறினாரேனும் அப் பகுதிக்கும் பொருட்பால் என்றே பெயரிட்டார். இதுகண்ட சிலர், வள்ளுவர் சாணக்கியரைப் பின்பற்றினுரென்பர். சாணக்கியரும் அரசியலைப் பெரும்பாலாக எடுத்தோதும் தமது நூலுக்கு அர்த்த சாத்திரம் அல்லது பொருள் நூலென்றே பெயரிட்டுப் போயினர். ஆனால் சாணக்கியருக்கு முன்னே வந்த பிரகசுபதி, சுக்கிரன் போன்றோரும் அவ்வாறே செய்துள்ளனர். அவர் கட்கும் ஆதியான மகாபாரதத் லே அந்த முறையிலேயே பெயர் வழங்கப்பட்டுள்ளது. எனவே இது அன்று இந்திய நாட்டுக்குரிய ஒரு பொது மரபாக இருந்திருக்கின்றது. பொருள்வளமே இன்பத்திற்கு நேர் காரணம். அரசியல் துணைக்காரணமே.

(தொடரும்)

கரும்புதந்த தீஞ்சாறே,
கனிதந்த நறுஞ்சுளையே,
கவின்செய் முல்லை

அரும்புதந்த வெண்ணகையே,
அணிதந்த செந்தமிழே,
அன்பே, கட்டி

இரும்புதந்த நெஞ்சுடையார்
துறைதோறும் நின்னெழிலை
ஈடழித்து

வரும்புதுமை நினைக்கையிலே
நெஞ்சுபதைக் கும்சொல்ல
வாய்பதைக்கும்.

உயர்தமிழ்த்தாய் இங்கிலத்தில்
அடைகின்ற வெற்றியெலாம்
உன்றன் வெற்றி!

அயராதே எழுந்திருநீ!
இளந்தமிழா அறஞ்செய்வாய்!
நாம டைந்த

துயரத்தைப் பழிதன்னை
வாழ்வினிலோர் தாழ்மையினைத்
துடைப்பாய் இந்நாள்

செயல்செய்வாய்த் தமிழுக்குத்
துறைதோறும் துறைதோறும்
சீறி வந்தே.

— பாரதிதாசன்

மூடத் திருமணம்

'முல்லை சூடி நறுமணம் முழுகிப்
பட்டுடை பூண்டு பாலொடு பழங்கள்
ஏந்திய வண்ணம் என்னருமை மகள்
தனது கணவனும் தானுமாகப்
பஞ்சணை சென்று பதைப்புறு காதலால்
ஒருவரை ஒருவர் இழுத்தும் போர்த்தும்,
முகமல ரோடு முகமலர் ஒற்றியும்.
இதழோடு இதழை இனிது சுவைத்தும்
நின்றும் இருந்தும் நேயமோடு ஆடியும்
பிணங்கியும் கூடியும் பெரிது மகிழ்ந்தே
இன்பத்துறையில் இருப்பர்' என்று எண்ணினேன்.
இந்த எண்ணத்தால் இருந்தேன் உயிரோடு!
பாழும் கப்பல் பாய்ந்து வந்து
என்மகள் மருமகன் இருக்கும் நாட்டில்
என்னை இறக்கவே, இரவில் ஒருநாள்
என்மகள் – மருகன் இருவரும் இருந்த
அறையோ சிறிது திறந்து கிடந்ததை
நள் இராப்பொழுதில் நான் கண்டபோதில்
இழுத்துச் சாத்த என்கை சென்றது;
கழுத்தோ கதவுக்கு உட்புறம் நீண்டது!
கண்களோ மருகனும் மகளும் கனிந்து
காதல் விளைப்பதைக் காண ஓடின!
வாயின் கடையில் எச்சில் வழியக்
குறட்டை விட்டுக், கண்கள் குழிந்து
நரைத்தலை சோர்ந்து, நல்லுடல் எலும்பாய்ச்
சொந்த மருகக் கிழவன் தூங்கினான்!
இளமை ததும்ப, எழிலும் ததும்பக்
காதல் ததும்பக், கண்ணீர் ததும்பி
என்மகள் கிழவனருகில் இருந்தாள்.
சிவந்த கன்னத்தால் விளக்கொளி சிவந்தது!
கண்ணீர்ப் பெருக்கால் கவின் உடை நனைத்தாள்!
தொண்டு கிழவன் விழிப்பான் என்று
கெண்டை விழிகள் மூடாக் கிளிமகள்
காதலும் தானும் கனலும் புழுவுமாய்
ஏங்கினாள்; பின்பு வெடுக்கென்று எழுந்தாள்.
சர்க்கரைச் சிமிழியை பாலிற் சாய்த்தாள்.
செம்பை எடுத்து வெம்பி அழுதாள்.
எதையோ நினைத்தாள்! எதற்கோ விழித்தாள்!
உட்கொளும் தருணம் ஓடிநான் பிடுங்கினேன்.
பாழுந் தாயே! பாழுந் தாயே!
என்சாவுக்கே உனை இங்கு அழைத்தேன்!
சாதலைத் தடுக்கவோ தாய்எமன் வந்தாய்?
என்று—எனைத் தூற்றினாள். இதற்குள் ஓர்பூனை
சாய்ந்த பாலை நக்கித் தன்தலை
சாய்ந்து வீழ்ந்து செத்தது கண்டேன்.
மண்ணாய்ப் போக! மண்ணாய்ப் போக!
மனம் பொருந்தா மணம் மண்ணாய்ப்போக!
சமூகச் சட்டமே! சமூக வழக்கமே!
நீங்கள், மக்கள் அனைவரும்
ஏங்கா திருக்க மண்ணாய்ப் போகவே!

— பாரதிதாசன்

பாரதிதாசன் கவிதைகள்

— வி. ஆர். எம். செட்டியார்.

பாரதிதாசன் கவிதைகளிலே நாம் உண்மையைக் காண்கிறோம்; அழகை அனுபவிக்கிறோம்; சக்தியை உணர்கிறோம்; கவிதையின் சிருட்டி எழிலை உணர்ந்துபாடும் பாரதிதாசன், எவ்வளவு சிறந்த உள்ள உத்வேகத்துடன் கவிதை பொழிகின்றார்! கவிஞர் எதையும் அனுபவித்தே எழுதுகின்றார். அவருடைய ஆழ்ந்த ஊறிய தமிழ்ச்சொற்கள், சிந்தனைகளைக் கவ்விச் செல்லும் சிட்டுக் குருவிகள்; குருவியின் கூரிய மூக்குப்போல அவருடைய மொழி கூர்மை பெற்றுவிட்டது.

"அழகின் சிரிப்பு" என்றகவிதை நூலின் தலைப்பே அனுபவ மொழியின் அதிகாரத்தை உவமை நயத்துடன் எடுத்துக்காட்டவில்லையா?

அழகு சிரிக்குமா என்று சிலர் கேட்கலாம். அழகு சிரிக்கத்தான் செய்கிறதுஇயற்கை உலகிலே, கவிஞன் உள்ளத் தடாகத்திலே, அழகு மலர்ந்து சிரிப்பது உண்மை. வாசகனுக்கும் கற்பனைக்கண்கள் வேண்டும். அப்போதுதான் கவிஞனைக்கவிஞன் கண்கொண்டு அனுபவிக்கலாம்; அழகின்சிரிப்பிலே கவிஞன் அனுபவிக்கின்ற பகுதிகள்; அழகு, கடல், தென்றல், காடு, குன்றம், ஆறு. செந்தாமரை, ஞாயிறு. வான், ஆல். புறாக்கள், கிளி, இருள், சிற்றூர், பட்டணம், தமிழ் அனைத்தையுமே கவிஞர் சிரிக்கக் காண்கிறார்; இந்தச் சித்திரத்தைக் கவிஞர் தமிழ் மொழியில் எழுதிக் காட்டுகின்றார். "காலையிளம் பரிதியிலே அவளைக் கண்டேன்! கடற் பரப்பில். ஒளி புனலில் கண்டேன்? அந்தச் சோலையிலே மலர்களிலே, தளிர்கள் தம்மில். தொட்ட இடம் எல்லாம் கண்ணில் தட்டுப்பட்டாள். மாலையிலே மேற்றிசையில் இலகுகின்ற மாணிக்கச் சுடரில் அவள் இருந்தாள்! ஆலஞ்சாலையிலே கிளைதோறும் கிளிகள் கூட்டந்தனில் அந்த "அழகெ"ன்பாள் கவிதை தந்தாள். எப்படி அழகு உதயமாகிறது. கவிஞன் கவிதைக் கண்ணிலே, கவிஞன் உள்ளத் துடிப்பைத் தாங்கி நிற்கும் இன்பச் சொற்களிலே இதை ஓர் உண்மைக் கவிஞன்தான் பாடமுடியும். தென்றல் வருணனை எப்படி இருக்கிறது பாருங்கள்

"அண்டங்கள் கோடி கோடி
அனைத்தையும் தன் அகத்தே
கொண்ட ஓர் பெரும் புறத்தில்
கூத்திடுகின்ற காற்றே!
திண்குன்றைத் தூள் தூளாகச்
செய்யினும் செய்வாய்; நீ ஓர்
நுண்துளி அனிச்சம்பூவும்
நோகாது நுழைந்தும் செல்வாய்"

கவிதையின் சக்தி இதில் தெரிகிறது. அழகு சக்தியாக மாறி உண்மையை அகக்குன்றில் தூண்டுகிறது.

(தொடர்ச்சி 5ம் பக்கம் பார்க்க)

ஆசிரியரும் வெளியிடுபவரும் : பேராசிரியர் சி. இலக்குவனார், கருமுத்து அகம், மதுரை-6.
அச்சிட்டோர்: கு. திரவியம், மேலாளர், கலைக்கோயில் அச்சகம், 62, நாயக்கர் புதுத்தெரு, மதுரை.